விலை: 30.00
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 262 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 22 புதன்கிழமை (07.09.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## பளையில் 1,840 ஏக்கர் காணி இராணுவத்துக்கு வழங்க ஏற்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பளைப்பகுதியில் 1,840 ஏக்கர் காணியை இராணுவத்துக்கு வழங்குவதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக தெரியவருகின்றது.

கிளிநொச்சி - பளை பகுதியில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கீழ் உள்ள காணியில் இராணுவத்தினர் பண்ணை அமைக்க 1,840 ஏக்கர் நிலம் வழங்குவதற்கு அமைச்சரவை ஒப்புதலுக்குப் பத்திரம் நகர்கின்றது.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு பளையில் தற்போது 4 ஆயிரம் ஏக்கர் நிலம் உள்ளது.

இதில் 1,840 ஏக்கர் நிலம் விவசாய அமைச்சின் கீழ் இயங்கிய மக்கள் பெருந்தோட்ட சபைக்கு 1988 இல் வழங்கிய 15

## ஐ.எம்.எப் ஒப்பந்தம் வெளிப்படுத்தப்பட வேண்டும்

### அரசு தன் நலனுக்காகவே செயற்படுகின்றது - சஜித் சீற்றம்

(கொழும்பு)

அரசாங்கம் வரிக்கு மேல் வரி விதிப்பதன் மூலம் மக்களை கடுமையான அழுத்தத்திற்கு உள்ளாக்கியுள்ளதாகவும், அதைத் 02



### 350 ரூபாயாக

## பாணின் விலை அதிகரிக்கப்படலாம்

(கொழும்பு)

ஒரு கிலோகிராம் கோதுமைமாவின் விலை 450 ரூபாயைக் கடந்தால், பாண் 15



## வலம்புரி

### புதிய அதிர்ஷ்டலாப சீட்டு அறிமுகம்



15

### நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்தை

# அச்சமின்றி ஆரம்பிப்போம்

### ஐ.தே.க ஆண்டு விழாவில் ரணில்

- பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக புதிய சட்டம்.
- உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை உருவாக்கத் திட்டம்.
- தொடர்ந்து பிச்சை எடுத்து உண்ண முடியாது. *(02ஆம் பக்கம் பார்க்க)*



### 22ஆவது திருத்தம் வாக்கெடுப்பின்றி

## அமுலாகும்

### நீதி அமைச்சர்

(கொழும்பு)

22ஆவது அரசியலமைப்புத் திருத்தம் சர்வஜன வாக்கெடுப்பின்றி அமுல்படுத்தப்படும் என நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார். 15

## ராஜபக்ஷ ஆட்சிக்கு ஆட்சேபனை தெரிவித்தவர்கள் கொல்லப்பட்டனர்

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

ராஜபக்ஷக்கள் தமது ஆட்சியின் நடவடிக்கைக்கு எதிராக யாராவது ஆட்சேபனை தெரிவித்தால், அவர்கள் கொல்லப்பட்டனர் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரி 15



### பாடசாலைகளுக்கு

## இன்று முதல் விடுமுறை

(கொழும்பு)

அனைத்து பாடசாலைகளுக்கும் 2022ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணை பாடசாலை விடுமுறைக்கான காலக்கெடு இன்றுடன் முடிவடைகிறது.

இதனை கல்வி 15

### இலங்கையை வங்குரோத்துக்கு

## இட்டுச் சென்றவர்களை சட்டத்தின் முன் நிறுத்துக

### ஐ.நா அறிக்கையில் சுட்டிக்காட்டு


(கொழும்பு)

இலங்கையை வங்குரோத்து நிலைக்கு இட்டுச் சென்றவர்கள் சட்டத்தின் முன்நிறுத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர், நேற்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 15

### கொஞ்சம் என்றாலும் மூளையைப் பாவியுங்கள்

## இராணுவம் தோட்டம் செய்வதன் மூலம் போசாக்கின்மையை தீர்க்க முடியுமா?

### சபையில் சிறீதரன் எம்.பி கேள்வி



- வடக்கில் தொடரும் சிங்கள நியமனங்கள்.
- இலங்கையின் அமைதியின்மையில் சீனா மறைமுகமாகச் செயற்படுகின்றது.

*(15ஆம் பக்கம் பார்க்க)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விலையை 50 ரூபாவால் குறைக்க முடியும்

## ஹர்ஷ டி சில்வா

(கொழும்பு)

இலங்கையில் எரிபொருட்களின் விலையை 50 ரூபாவால் குறைக்க முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலைச் சூத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்டால் உலகச் சந்தையிலுள்ள விலைகளுக்கேற்ப இலங்கையில் இந்த விலை மாற்றத்தை கொண்டுவர முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, மக்கள் நெருக்கடியான நிலையில் இருக்கும் போது இந்த எரிபொருள் சலுகையை வழங்க முடியுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எரிபொருள் விலைச் சூத்திரத்தின் பிரகாரம் செயற்படுவதாக அரசாங்கம் கூறியுள்ள போதிலும் வரி செலுத்தியதன் பின்னர் தற்போது ஒரு லீட்டர் எரிபொருளுக்கு 50 ரூபா இலாபம் அரசாங்கத்துக்குக் கிடைத்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில் எரிபொருள் விலைச் சூத்திரம் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு எதிர்வரும் 15ஆம் திகதி முதல் நிதியமைச்சிடம் ஒப்படைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## அச்சமின்றி...

இளைஞர்கள் முன்னெடுத்த முதலாவது போராட்டம் முடிந்து விட்டதாகவும் நாட்டை கட்டியெழுப்புவதற்கான இரண்டாவது போராட்டத்தை இங்கிருந்து ஆரம்பிப்போம் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் 76ஆவது ஆண்டு விழாவில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்

உண்மையை கண்டறியும் ஆணைக்குழு ஒன்றை உருவாக்க புதிதாக சட்டம் தயாரிக்க உத்தேசித்திருப்பதாகவும் பயங்கரவாத தடைச்சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டம் ஒன்றை கொண்டுவர் எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டார்.

இந்தப் பணியில் அனைத்து தரப்பினரையும் பேதமின்றி இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுப்பதாக தெரிவித்த ஜனாதிபதி, சக்தி வாய்ந்த நாட்டைக் கட்டியெழுப்பும் தேவை, தனதுசொந்த நலனுக்கு அன்றி, அடுத்த தலைமுறைக்காகவே கட்டியெழுப்பவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

பயங்கரவாத தடைச்சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டம் ஒன்றை கொண்டுவர எதிர்பார்ப்பதாகவும் அத்துடன், உண்மையை கண்டறியும் ஆணைக்குழு ஒன்றை உருவாக்க புதிதாக சட்டம் தயாரிக்க உத்தேசித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மக்கள் தற்போதைய அரசியல் கலாசாரத்தை வெறுக்கின்றனர். நாட்டின் எதிரணி விமர்சனங்களுக்கு மாத்திரம் மட்டுப்பட்டுள்ளது.அதேவேளை இளைஞர்கள் மாற்றத்தை எதிர்பார்க்கின்றனர்.

சில தவறுகளினால் பெரும் நன்மை இழக்கப்பட்டது. 22 ஆவது திருத்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதனை நிறைவேற்ற வேண்டும். அரசியலமைப்பில் மேலும் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

இலங்கை என்ற நாடு தமிழ், சிங்கள, முஸ்லிம் என அனைத்து இன மக்களுக்கும் சொந்தமானது. நாம் ஒவ்வொரு நாளும் பிச்சையெடுத்துக் கொண்டும், கடன் எடுத்துக் கொண்டும் இருக்க முடியாது. சிங்களம், தமிழ், முஸ்லிம் என்று யாராக இருந்தாலும் யாரும் வங்குரோத்து அடைய விரும்புவதில்லை. எனவே, கடன் பெறாத பொருளாதாரம் ஒன்றை உருவாக்க ஒன்றுபடுவோம். இளைஞர்கள் மாற்றத்தைக் கோரி முதலாவது போராட்டத்தை ஆரம்பித்தனர். அந்தப் போராட்டம் முடிந்துவிட்ட நிலையில், நாட்டைக் கட்டியெழுப்பும் இரண்டாவது போராட்டத்தை இங்கிருந்து ஆரம்பிப்போம். என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ம-7)

## ஐ.எம்.எப்...

தாங்க முடியாத அளவுக்கு மக்கள் மாறி விட்டனர் எனவும், இவை எல்லாவற்றுக்கும் மத்தியில் அரசாங்கம் தன் நலனுக்காகவே செயல்படுகிறது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைக்கும் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துரைத்த அவர் "இந்த வரிகளைப் பயன்படுத்தி அமைச்சர்களுக்கு நிவாரணம் வழங்கவும் கடந்த சில நாட்களுக்கு முன்னர் பாதிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நட்ட ஈடு வழங்கவுமே இது முன்னெடுக்கப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை நாட்டு மக்கள் அறிந்து கொள்ள வேண்டும், இரகசியமாக கைச்சாத்திடப்படும் ஒப்பந்தங்களுக்கு நாட்டு மக்களால் இழப்பீடு வழங்க முடியாது.

முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் தனிப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் கைகோர்த்து செயற்பட்டதாலேயே தோல்வியடைந்தது இன்றும் அவ்வாறே நடந்து வருகிறது" எனக் குறிப்பிட்டார். (ம-7)

# ஐ.எம்.எப் உடன்படிக்கைகள் அமைச்சரவையில் இன்னும் முன்வைக்கப்படவில்லை

## அமைச்சர் சுசில்

சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் மட்ட ஒப்பந்தம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவில்லை என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்று பாராளுமன்றத்தில் ஒப்புக்கொண்டார்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா, அமைச்சரவைக்கு அது தொடர்பில் தெரியுமா என பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்சன யாப்பா கேட்ட கேள்விக்கு பதிலளித்தார்.

பாராளுமன்றத்தில் விளக்கமளிப்பதற்கு முன்னர் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்சன யாப்பா மேலும் தெரிவித்தார். (ம-7)

# மரண அறிவித்தல்



## வத்ஸலா நகுலராஜா

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07.08.1980 | 05.09.2022 |

ஆலடி, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட வத்ஸலா நகுலராஜா அவர்கள் கடந்த 05.09.2022 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நகுலராஜா - மாதகலைச் சேர்ந்த மங்கையற்கரசி (கிரிகரன் ரெக்ஸ் ரைல்ஸ்) தம்பதிகளின் பாசமிகு மகளும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த குமாரசாமி இலட்சுமியம்மா மற்றும் மாதகலைச் சேர்ந்த செல்லத்துரை பரமேஸ்வரியம்மா ஆகியோரின் பேர்த்தியும் குலராஜா (லண்டன்), றஜனி(லண்டன்), ஸ்ரீராஜ்(லண்டன்), நகுலரசி(இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுபாஸ்கரன், சாருஜா, விஜயலலிதா ஆகியோரின் மைத்துனியும் ஷயாம், அக்ஸயன், சயந்த் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சுவேதிகா, கிரிகரன் ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2022) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணியளவில் ஊறணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
(நகுலன் மேஸ்திரி -
077 405 5782)

ஆலடி,
வல்வெட்டித்துறை. (C-4874)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோதுமை மாவுக்கான தட்டுப்பாட்டால்

## அரிசிக்கும் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

### அவதானிகள் சுட்டிக்காட்டு

**(கொழும்பு)**
**நாட்டில் நிலவும் கோதுமை மாவின் தட்டுப்பாடு காரணமாக சந்தையில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.**

நாட்டில் கோதுமை மா நுகர்வு கணிசமான பங்கினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும், அரிசித் தேவைக்கு அந்தப் பங்கு ஈடு செய்யப்படுமாக இருந்தால், அரிசி தேவையைப் பூர்த்தி செய்வது சவாலாக இருக்கும் எனவும் சந்தை அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தற்போது அரிசி விநியோகம் கட்டுப்பாடின்றி நடைபெற்று வரும் நிலையில், மா தட்டுப்பாடு மோசமடைந்து அரிசிக்கும் இதே தேவை ஏற்பட்டால், சந்தையில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படலாம் என அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

தற்போது சிறுபோக அறுவடை இடம்பெற்று வரும் நிலையில் சந்தையில் அரிசி விலை சற்று குறைந்துள்ள நிலையில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டால் மீண்டும் விலையும் அதிகரிக்கும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (நி)

# மத்திய வங்கி ஆளுநரை நீக்க வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு இல்லை

(கொழும்பு)
மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநர் கலாநிதி. நந்தலால் வீரசிங்கவை அந்தப் பதவியில் இருந்து நீக்க வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன நேற்று பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி ஆளுநரை பதவி நீக்கம் செய்ய தங்களுக்கு விருப்பம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நந்தலால் வீரசிங்க முன்னாள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டார் என குறிப்பிட்ட அவர், தற்போதைய ஜனாதிபதி அவரது பதவிக்காலத்தை நீடித்தார் எனவும் குறிப்பட்டுள்ளார்.

அத்துடன், மத்திய வங்கி ஆளுநரை பதவி நீக்கம் செய்ய முயல்வதாக எதிர்க்கட்சியினர் இந்த நாட்டுக்கு காட்ட முயற்சிக்கின்றனர் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (நி)

# வெளிநாடுகளில் தஞ்சம் கோரிய கோட்டாவை அவசரமாக நாட்டிற்கு அழைத்தது ஏன்?

### பொன்சேகா கேள்வி

(கொழும்பு)
"போராட்டக்காரர்கள் அடங்கிவிட்டார்கள் என்றும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் சுதந்திரமாக அரசியலில் இறங்கலாம் என்றும் அரசு கனவு காண்கின்றது. போராட்டக்காரர்களின் கொதிநிலை இன்னமும் அடங்கவில்லை. நாட்டை நாசமாக்கிய ராஜபக்ஷக்களை அவர்கள் சும்மாவிட மாட்டார்கள். ராஜபக்ஷக்கள் மட்டுமல்ல இந்த அரசே கூண்டோடு நாட்டை விட்டுத் தப்பியோடும் நிலை வரும்" என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,
"முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு அவசரமாக அழைத்ததன் உண்மையான நோக்கம் என்ன?

அடுத்த மாதம் ஜெனிவா அமர்வு ஆரம்பமாகவுள்ள நிலையில் வெளிநாடுகளில் அடைக்கலம் கோரிய கோட்டாபயவை நாட்டுக்கு அரசு அவசரமாக அழைத்துள்ளது. இந்த அவசர அழைப்பின் பின்னணி என்ன?

மக்களுக்குப் பயந்தே, நாட்டைவிட்டுத் தப்பியோடி ஜனாதிபதிப் பதவியிலிருந்து கோட்டாபய விலகியிருந்தார். அவர் மீண்டும் நாட்டுக்கு வர விரும்பவில்லை. இந்நிலையில், அவருக்கு விசேட பாதுகாப்பை வழங்கி அவரை அரசு ஏன் மீள அழைத்தது?" என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (நி)

# தமிழின அழிப்பிற்கு நீதிகோரி பேரணி ஐரோப்பிய ஒன்றியத்தை வந்தடைந்தது



(பெல்ஜியம்)
எழுச்சி கொண்ட இனத்தினை எந்த அடக்குமுறைகளாலும் நசுக்கிவிட முடியாது. அதற்கான எடுத்துக்காட்டாகத்தான் தமிழ் மக்களின் போராட்டங்களும் பேரெழுச்சி கொண்டு அறவழிப்போராட்டமாக தொடர்கின்றன.

அந்த வகையில் தமிழ் இனத்தின் மீது ஸ்ரீ லங்காப் பேரினவாத சர்வாதிகார அரசு கட்டவிழ்த்து விட்ட தமிழின அழிப்பிற்கு அனைத்துலக சுயாதீன விசாரணை வேண்டியும் தமிழர்களின் பூர்வகுடி நிலமான தமிழீழத்தின் விடுதலையினையும் வேண்டி 25 ஆவது தடவையாக ஈருருளிப்பயண அறவழிப்போராட்டம் தொடர்கின்றது.

இப்பயணம் நான்காம் நாளாக நேற்று முன்தினம் நெதர்லாந்து நாடு கடந்து பெல்ஜியத்தில் அமைந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்றலை வந்தடைந்தது. (நி)

### போஷாக்கு குறைபாட்டால்

# பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் நிவாரணம்

(கொழும்பு)
போஷாக்கு குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ள 61 ஆயிரம் குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

நிதி பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் செயலாளர் கே.எம். எம்.சிறிவர்தன இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, குறித்த குடும்பங்களுக்கு 4 மாதங்களுக்கு இவ்வாறு நிவாரணம் வழங்கப்படவுள்ளதாகவும் உலக உணவுத் திட்டத்தின் கீழ் குறித்த நிவாரண உதவி வழங்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# வேகமாகப் பரவும் வைரஸ் காய்ச்சல் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறுங்கள்

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் கோரிக்கை

(கொழும்பு)
நாட்டில் அண்மைய காலமாக வைரஸ் காய்ச்சல் பரவி வருவதால் மருத்துவ ஆலோசனையின்றி விருப்பத்தின் பேரில் சிகிச்சை பெற வேண்டாம் என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.



டெங்கு, கொரோனா, இன்புளுவன்சா மற்றும் பல்வேறு வைரஸ் காய்ச்சல்கள் தற்போது பரவி வருவதால், அவற்றை சரியாக கண்டறிந்து சிகிச்சை அளிக்க வேண்டும்.

எனவே மருத்துவ பரிந்துரைகள் இன்றி சிகிச்சை எடுப்பது மிகவும் ஆபத்தானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மழையுடன் கூடிய காலநிலையுடன், டெங்கு, கொரோனா மற்றும் இன்புளுவன்சா நோய்களின் பரவல் அதிகரிக்கக்கூடும்.

எனவே மிகவும் அவதானமாக இருக்குமாறு பொதுமக்களிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (நி)

# பயிர்ச் சேதங்களுக்கான இழப்பீட்டுத் தொகையை அதிகரிக்க விவசாய அமைச்சு திட்டம்-அமரவீர

(கொழும்பு)
பயிர்ச்சேதத்திற்கு அரசாங்கம் வழங்கும் இழப்பீட்டுத் தொகையை உயர்த்த விவசாய அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பான வேலைத் திட்டத்தை தயாரிக்குமாறு விவசாய காப்புறுதி சபைக்கு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர பணிப்புரை விடுத்துள்ளார்.

நெல், மிளகாய், [illegible] சோளம், உருளைக்கிழங்கு, வெங்காயம் ஆகிய பயிர்களுக்கு சேதம் ஏற்பட்டால் இது வரை ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபா வழங்கப்பட்ட நிலையில், அந்த தொகையை 60 ஆயிரம் ரூபாவாக உயர்த்த அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22 ஆவது திருத்தம் அரசியலமைப்பிற்கு முரணானது

### உயர் நீதிமன்றம் அறிவிப்பு

(கொழும்பு)
அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தத்தின் உட்பிரிவுகள் அரசியலமைப்பின் விதிகளுக்கு முரணாக இருப்பதாக உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அவை பொது வாக்கெடுப்பு இல்லாமல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் எனில் திருத்தப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின்போதே சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன இதனை தெரிவித்தார். (நி)

# கரப்பந்தாட்டப் போட்டி

## புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி

## இரு பிரிவில் சம்பியன்




வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி 16, 20 வயதிற்குட்பட்ட பிரிவுகளில் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் திங்கட் கிழமை புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

16 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணியை எதிர்த்து மன்னார் துள்ளுக்குடியிருப்பு வித்தியாலய அணி மோதியது.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணியை எதிர்த்து வவுனியா மடுகந்தை தேசிய பாடசாலை அணி மோதியது.

அதிலும் அபாரமான ஆட்டத்தை வெளி ப்படுத்திய புத்தூர் சோமஸ் கந்தா கல்லூரி அணி வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. (4-90)

# இருபது-20 போட்டியில் முஷ்பிகுர் ரஹிப் ஓய்வு

ஐ.சி.சி இருபது- 20 போட்டிகளிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான முஷ்பிகுர் ரஹீம் தெரிவித்துள்ளார்.

முஷ்பிகுர் ரஹீம் பங்களாதேஷ் அணிக்காக 102 இருபது- 20 போட்டிகளில் விளையாடியுள்ளார். இதேவேளை ஒரு நாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் தொடர்ந்தும் கவனம் செலுத்தவுள்ளதாகவும் முஷ்பிகுர் ரஹீம் அறிவித்துள்ளார்.

மேலும் தற்போது நடைபெற்றுவரும் ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரிலிருந்து பங்களாதேஷ் அணி வெளியேறியதைத் தொடர்ந்து அவர் இந்த முடிவை எடுத்துள்ளமை குறிப்பிடதக்கது. (4)



# அமெரிக்க பகிரங்க டென்னிஸ்

# நடால் அதிர்ச்சி தோல்வி

ஆண்டின் இறுதியில் கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரின் நான்காவது சுற்றுப் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் ஸ்பெயினின் முன்னனி வீரரான ரபேல் நடால் அதிர்ச்சித் தோல்வி அடைந்துள்ளார்.

இதேவேளை பெண்கள் ஒற்றையர் பிரிவில் செக் குடியரசின் கரோலினா பிளிஸ்கோவா வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இதில் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்றுப் போட்டியில் ஸ்பெயினின் முன்னனி வீரரான ரபேல் நடால் அமெரிக்காவின் பிரான்ஸிஸ் டியோஃபோவுடன் மோதினார்.

இப்போட்டியில் சிறப்பாக விளையாடிய பிரான்ஸிஸ் டியாஃபோ 6-4, 4-6, 6-4, 6-3 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியுள்ளார். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2693

**கவின்**

குடித்து விட்டு வந்த கணவன் தனது மனைவியின் திட்டைச் சமாளிக்க மடிக்கணனியை எடுத்துக் கொண்டு வேலை செய்யத் தொடங்கினான்

மனைவி -குடிச்சீங்களா

கணவன்- இல்லம்மா

மனைவி -குடிகார சனியனே அப்புறம் ஏன் சூட்கேசை தொதிறந்து வெச்சு டைப் பண்ற

**மாதவி**

ஒருவருடைய தவறை சுட்டிக்காட்டு ஆனால் குத்திக் காட்டாதே தவறுகளை திருத்தி விடலாம். ஆனால் உன் சொற்களால் ஏற்பட்ட காயத்திற்கு மருந்திட முடியாது

**கிருஷ்ணன்**




**தீபா**



ஏங்க நான் வரும் போது மட்டும் கண்ணாடி போடுறீங்க

டாக்டர் தான் தலைவலி வரும்போது மட்டும் போட்டுக்க சொன்னாரு



**தயாழினி**

ஆயிரம் பேரிடம் யோசனை கேள்! ஆனால் முடிவை நீ மட்டும் எடு!

**சுஜா**

நெருங்கியவர்களோடு மட்டும் எப்போதும் விளக்கமாகப் பேசு மற்றவர்களிடம் சுருக்கமாகம் பேசு



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



அமரர். கந்தையா மயில்வாகனம்

யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி. பாலசாயினி பாலசபேஸ் அவர்களின் அன்புத் தந்தையார். அமரர். கந்தையா மயில்வாகனம் அவர்கள் 06.09.2022 அன்று இறைபதம் அடைந்துவிட்டார். அவரின் இழப்பினால் துயருறும் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன். இத் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம். (12694)

ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி.

## தங்கத்தின் விலையில் வீழ்ச்சி

(கொழும்பு)

உலக சந்தையில் நாளுக்கு நாள் தங்கத்தின் விலை, ஏற்ற இறக்கத்துடன் பதிவாகி வருகின்றது.

இந்நிலையில், ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை இலங்கை ரூபாவின்படி 622,034 ரூபாவாக பதிவாகியுள்ளது.

இலங்கையில் கடந்த மாதங்களை விட தற்போது தங்கத்தின் விலையில் பாரிய வீழ்ச்சி பதிவாகி வருகின்றது.

இலங்கையில் தங்க நிலவரத்தின்படி, 24 கரட் தங்கப் பவுண் ஒன்று 175,550 ரூபாவாக பதிவாகியுள்ளது.

அதேபோல 22 கரட் தங்கப் பவுண் ஒன்று 161,000 ரூபாவாக பதிவாகியுள்ளது.

இதேவேளை, கடந்த மாதங்களில் 22 கரட் தங்கப் பவுண் ஒன்று வரலாறு காணாத வகையில் உயர்ந்து 200,000 ரூபாவை எட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பெயர் மாற்றம்

முள்ளிவீதி அரியாலை மத்தி தெற்கில் வசிக்கும் வை.தேவானந் ஆகிய நான்.


எனது பெயரை இன்றிலிருந்து வை.தேவானந்தன் என மாற்றம் செய்து இனிவரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என்பதனை இலங்கை சனநாயகக் குடியரசில் வாழும் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

உண்மையுள்ள,
(2606) வை.தேவானந்தன்.

# கண்ணீர் அஞ்சலி

யா/ கோப்பாய் தெற்கு றோ.க.த.க பாடசாலை ஆசிரியர் திருமதி. தர்மினி பார்த்திபன் அவர்களின் அன்புக் கணவர்

அமரர். மகேசு பார்த்திபன்



(F-4870)

ஆசிரியராய் சிற்பாசானாய் அரும்பணியாற்றி கனடா சென்று கலை வளர்த்த கலைக் கலைஞனின் துயரில் நாமும் பங்கெடுப்பதுடன் அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தும் கொள்கின்றோம்.

யா/கோப்பாய் தெற்கு றோ.க.த.க பாடசாலை. அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.


உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

## அன்பு வாசகர்களே!

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரின் உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு:

தொலைபேசி:
076 097 3127
021 221 7603
Viber: 076 636 3378
E.mail:
valampurii@yahoo.com


# கண்ணீர் அஞ்சலி

அமரர். நாகேசு கந்தசாமி

பிறப்பு— 1950.03.02
இறப்பு— 2022.09.05



எமது பாடசாலையின் ஆசிரியை செல்வி. க.தாட்சாயினி அவர்களின் தந்தையார் அமரர். நாகேசு கந்தசாமி அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு துயர் அடைவதுடன் அவருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (F-4868)

பிரிவுத்துயருடன்
ஆசிரியர் கழகம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

# இராசிபலன்

07.09.2022
ஆவணி 22, புதன்கிழமை
துவாதசி முன்னிரவு 10.35 மணிவரை

உத்தராடம் பிற்பகல் 3.11 மணிவரை
சுபநேரம் -4.34-6.04 மணிவரை
இராகுகாலம் 12.04-1.34 மணிவரை

அமிர்தசித்தம்
சந்திராஷ்டமம் -மிருகசீரிடம், திருவாதிரை

வளவன்



மேஷம்

நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், கனவு பலிதமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுப செய்திகள் வந்து சேரலாம்.



கடகம்

ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.



துலாம்

நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும்.



மகரம்

வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், பெரியோரின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம்.



ரிஷபம்

மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும், கணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.



சிம்மம்

இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும் நாள், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள்.



விருச்சிகம்

உறவினர் நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பாராட்டும் புகழும் கூடும் நாள், போசன சுகமுண்டு.



கும்பம்

காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.



மிதுனம்

மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தேவையற்ற விரயங்கள் ஏற்படலாம்.



கன்னி

செய்தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.



தனுசு

ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், நீண்டநாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, வாக்கு மேன்மையுண்டு.



மீனம்

ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு மனிதர்களை இணைக்கும் பாலத்தின் பெயர்தான் நட்பு.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.**

## 36 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா-2022

யாழ்.பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய மாண வர்களுக்கு பட்டச் சான்றிதழ்களை வழங்கும் முகமாக பொதுப்பட்டமளிப்பு விழாவினை 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 08 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வியாபார முகாமைத்துவமாணி, வணிகமாணி ஆகிய பட்டக் கற்கைநெறிகளில் 28.03.2021 இற்கு பின்பும் 01.08.2022 திகதிக்கு முன்பும் சித்தியடைந்த மாணவர்களுக்கே மேற்படி பட்டமளிப்பு விழாவில் பட்டங்கள் வழங்கப்பட விருப்பதால், தகுதி உடைய மாணவர்கள் 19.09.2022 (திங்கட்கிழமை) இற்கு முன்னதாக அவரவருக்கான கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டினையும் பூர்த்தி செய்யப்பட்ட வேண்டுகோள் படிவத்தினையும் (Supplication Form) கீழே கொடுக்கப்பட்டுள்ள இணையத்தள முகவரியினூடாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

(கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதி பட்டமேலங்கியினை பெற்றுக்கொள்ளும் போது திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும்)

வேண்டுகோள் படிவங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டிய இணைய இணைப்பு :
https://bit.ly/3KJ4Eyu

- **கட்டணம் மற்றும் வங்கிக்கணக்கிலக்க விபரம்**


பட்டமளிப்பு விழா மொத்தக்கட்டணம் ரூபா.4000.00 ஆகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மக்கள் வங்கி கணக்கிலக்கத்திற்குச் சேரக் கூடியதாக ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் கட்டணத்தைச் செலுத்தவேண்டும். வங்கிப் பற்றுச் சீட்டில் பெயரையும் மாணவர் பதிவு இலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிடவும்.

மக்கள் வங்கிக்கணக்கிலக்கம் : 890002460001794

மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணூடாக அல்லது mdlcrd@univ.jfn.ac.lk தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(C-4870)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்.தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் கைலாச வாகன உற்சவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு வெகுசிறப்பாக இடம் பெற்றது.

(படம்:- ரவிசாந்)

## தெல்லிப்பழை துர்க்காதேவிக்கு
# இன்று தேர்த்திருவிழா

(குப்பிழான்)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா இன்று புதன்கிழமை காலை சிறப்பாக இடம்பெற உள்ளது.

இன்று காலை 7.30 மணியளவில் வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து காலை 9 மணியளவில் தேர்ப் பவனியும் நடைபெறும் என மேற்படி ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர்.

நாளை வியாழக்கிழமை ஆவணி ஓண நன்னாளன்று காலை 8.30 மணியளவில் "துர்க்கா புஷ்கரணி" தீர்த்தக் கேணியில் தீர்த்தோற்சவமும் மாலை 6 மணிக்கு கொடியிறக்க உற்சவமும் நடைபெற உள்ளது எனவும் ஆலய நிர்வாக சபையினர் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (4-18)

## கெற்பேலியில் கைக்குண்டுகள் மீட்பு



(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெற்பேலி இராச தோட்டப் பகுதியில் உள்ள காணியொன்றில் இருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைக்குண்டுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

காணி உரிமையாளர் உழவியந்திரம் மூலம் காணியை உழுத போதே வெடிக்காத நிலையில் நிலத்தில் புதைந்து காணப்பட்ட 6 கைக்குண்டுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இது தொடர்பாக காணி உரிமையாளர் கொடிகாமப் பொலிஸாரிடம் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் கைக்குண்டுகளை மீட்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். (4-30)

## சிறுவர் சித்திரக் கண்காட்சி
# வெள்ளி ஆரம்பம்

(குப்பிழான்)

சுவடி நிறுவகத்தின் ஏற்பாட்டில் சிறுவர் சித்திரக் கண்காட்சி நாளை மறுதினம் 09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 209, பலாலி வீதி, கோண்டாவிலில் அமைந்துள்ள எழுதிரள் பணிமனையில் ஆரம்பமாக உள்ளது. தொடர்ந்தும் மேற்படி கண்காட்சி வெள்ளி, சனி (10), ஞாயிற்றுக்கிழமைகளில் (11) காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும்.

குறித்த சிறுவர் சித்திரக் கண்காட்சி சுவடி நிறுவகத்தால் முன்னெடுக்கப்படும் யாழ்ப்பாணம் மாசற்ற மாநகரம் செயற்றிட்டத்தின் ஒரு அங்கமாகும்.

இதேவேளை, இவ்வருட நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட தரமான ஓவியங்கள் அனைத்தும் இந்த சித்திரக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படவுள்ளன. (4-18)

வடமராட்சி தெற்கு மேற்கு
## பிரதேச சபைக்கு புதிய செயலாளர்



(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் புதிய செயலாளராக பூநகரி பிரதேச சபையின் செயலாளராக கடமையாற்றிய கணேசன் நியமிக்கப்பட்டு நேற்று அவர் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

இதன்போது நெல்லியடி புதிய சந்தைப் பகுதியில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதாகவும் பிரதேச சபைக் குட்பட்ட மக்களுடைய குறைபாடுகளை நேரில் சென்று பார்வையிட்டு தீர்வு வழங்குவதாகவும் உறுதி அளித்தார். (4-60)

## நினைவுநாளும் நினைவுப் பேருரையும்

(யாழ்ப்பாணம்)

கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் நினைவு நாளும் நினைவுப் பேருரையும் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.45 மணிக்கு சுன்னாகம் சபாபதிப் பிள்ளை வீதியில் உள்ள வாழ்வக செல்வா மண்டபத்தில் வாழ்வக தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4)

## காரைநகரை பூர்வீகமாகக் கொண்ட மாணவி
## ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கு தெரிவு



(யாழ்ப்பாணம்)

ஈழத்து காரைநகரை பூர்வீகமாகக் கொண்ட லண்டனில் வசிக்கும் செல்வி. சாமினி சபாநடேசன் அதிவிசேட தெரிவில் தேர்ச்சி பெற்று லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திற்கு மருத்துவபீட மாணவியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முதன்முறையாக காரைநகரில் இருந்து லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு தெரிவாகிய இவர் சபாநடேசர், சிவமங்கை தம்பதியரின் மகள் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# சட்டவிரோத மணல் கடத்தல்
# 8 டிப்பர்கள் மடக்கி பிடிப்பு
## சாரதிகளும் கைது



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸாரால் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை வேளையில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச் சென்ற 8 டிப்பர் வாகனங்கள் பிடிக்கப்பட்டதுடன் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். மணல் அனுமதிப்பத்திரத்தில் திகதியை மாற்றி யாழ்ப்பாணம் நோக்கி மணலுடன் சென்ற டிப்பர் வாகனங்களே கைதடிப் பகுதியில் வைத்து பிடிக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர். கைதான 8 சாரதிகளையும் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (4-30-33-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியாவின் அதிசயமாக இலங்கை மீண்டும் நிரூபித்தது பாராளுமன்றம்

## சிறீதரன் எம்.பி சாட்டை

(கொழும்பு)

பாராளுமன்றில் பிரேரணைகள் முன் வைக்கப்படும் போது சபையில் அமைச்சர்கள் இல்லாமல் இருப்பது ஆசியாவின் அதிசயமாக இலங்கை திகழ இதுவும் ஒரு காரணம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்ற அமர்வு நேற்று காலை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் ஆரம்பமாகிய நிலையில் அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இவ்வாறு தெரிவித்தார். நேற்று நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் போசாக்கின்மை தொடர்பான ஒத்தி வைப்பு வேளையில் பிரேரணை முன் வைக்கபட்ட நேரம் பாராளுமன்றில் அமைச்சர்கள் இல்லாது காணப்பட்டது.

இதுவும் ஆசியாவின் ஆச்சரியமாக இலங்கை இருப்பதற்கு காரணமாக அமைகின்றது. இங்கு பொறுப்போடு சொல்கின்றோம், பொறுப்போடு பேசுகின்றோம் என இங்கு எல்லோரும் கூறுகின்றார்கள் ஆனால் இங்கு பொறுப்பு வாய்ந்தவர்கள் இல்லாத சபையை நாங்கள் பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# அரச ஓய்வூதியதாரர்களுக்கு சம்பளமற்ற விடுமுறை

## அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

சேவை மூப்பு பாதிக்காத வகையில், அரச ஓய்வூதியதாரர்களுக்கு அதிக பட்சமாக 5 வருடங்களுக்கு உள்ளூரில் சம்பளமற்ற விடுமுறை வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பொதுச் சேவைகள், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சராக, பிரதமரினால் இதற்கான அமைச்சரவைப் பத்திரத்திற்கு நேற்று அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த திட்டத்திற்கான பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 1
கி.பா:சூரி 6 செவ் 5 இல்
உயரம்: 176 cm
தகைமை/தொழில்:தனியார் தொழில் பிரான்ஸ்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/12907

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்:திருவாதிரை 4
கி.பா: 34 ½ சூரி 4 செவ் 12 இல்
உயரம்: 5' 5"
தகைமை/தொழில் BSc (Hons) பொறியியலாளர் சிங்கப்பூர்
எதிர்பார்ப்பு:படித்த பெண்
தொ.இ: B/12912

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூராடம் 1
கி.பா: சூரி, செவ் 3 இல்
தகைமை/தொழில்: A/L கட்டட ஒப்பந்தம்-வியாபாரம்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/12913

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம் : அனுசம் 4
கி.பா: 54 சூரி 8 செவ் 6 இல்
உயரம்:6'
தகைமை/தொழில்:உயர்தரம் கடை (தனியார்)
எதிர்பார்ப்பு :உயர்தரம் அல்லது அதற்கு மேல் படித்த பெண் விவாகரத்தானவர்
தொ.இ: B/12917

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 3
கி.பா:28 ½ சூரி , செவ் 1 இல்
உயரம்: 160 cm
தகைமை/தொழில்: BSc ஆசிரியை
எதிர்பார்ப்பு:அரச.தனியார் உத்தியோகம் வெளிநாடு
தொ.இ:G/12910

பிறப்பு:1991 கிறிஸ்தவம் NRC
நட்சத்திரம்:பூராடம் 2
கி.பா: சூரி 12 செவ் 2 இல்
உயரம்:5
தகைமை/தொழில்: BSc, வங்கி காசாளர்
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம் இந்து சமயத்தவரும் ஏற்றுக்கொள்ளப்படும்
தொ.இ: G/12911

பிறப்பு: 1998 இந்து
நட்சத்திரம்:அனுசம் 3
உயரம் : 165 cm
கி.பா: சூரி 6 செவ் 4 இல்
தகைமை/தொழில்: A/L தையல்
எதிர்பார்ப்பு: கனடா மட்டும்
தொ.இ:G/12915

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்:விசாகம் 2
கி.பா:38 சூரி 3 செவ் 1 இல்
உயரம்:5' 3"
தகைமை/தொழில் : BSc விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு: உத்தியோகம் சொந்தக்கடை
தொ.இ:G/12916

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**



# சேவைநலன் பாராட்டுவிழா

**07.09.2022**






**திருமதி.**
**இந்திராதேவி சுந்தரமூர்த்தி**
(SLPS I) (பிரதி அதிபர்)

**சேவைக்காலம்–31.08.2016–07.03.2022**

பிரதி அதிபராய் நிர்வாகத்துறையில்
பொறுப்பேற்ற நாள் முதல்
கடமையே கண்ணாய்
பணியே சேவையாய்
புன்சிரிப்பே அணிகலனாய்
பொறுமையே குணாதிசயமாய்
ஆசிரியர்களுக்கு வழிகாட்டினீர்கள்

அன்பு கொண்ட நீங்கள் அருகில் இருந்தால் என்ன
தொலைவில் இருந்தால் என்ன
தொலையாத உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சில் எப்போதுமிருக்கும்
வாழ்க உங்கள் சேவை தொடர்க உங்கள் பணி.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**ஆசிரியர் ஊழியர் நலன்புரிச் சங்கம்,**
**கிளி/கிளிநொச்சி ம.வி,**
**கிளிநொச்சி.**

(c-4869)



**வடக்கு மாகாண கல்வி அமைச்சின்**
**இளைஞர் விவகார அலகு வழங்கும்**
**வடக்கு மாகாண இளைஞர்களுக்கான**
**இலவச யோகக்கலை, சிலம்ப பயிற்சி வகுப்புக்கள்**

வடக்கு மாகாண இளைஞர் விவகார அலகின் ஏற்பாட்டில் வல்லமைகாண் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யோகக்கலை மற்றும் சிலம்பம் இலவச பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

**பங்கு பற்றுநர்களுக்கு பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

**வயதெல்லை இல்லை.**

**குறித்த மாவட்டங்களைச் சேர்ந்த ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்**

**1. யோகக்கலைப் பயிற்சி**

வகுப்புக்கள் யாழ்ப்பாணம். மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் இடம்பெறும்.

விண்ணப்ப முடிவுத்திகதி - 14.09.2022 புதன்கிழமை

யாழ்.மாவட்ட பயிற்சி வகுப்புக்கள் 17.09.2022 ஆம் திகதி சனிக்கிழமையும் போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதும் மன்னார் மற்றும் வவுனியா மாவட்ட வகுப்புக்களும் ஆரம்பிக்கப்படும்.

**2. சிலம்பப்பயிற்சி**

அநேகரின் வேண்டுகோள்களுக்கிணங்க யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட வகுப்புக்கள் மீளவும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

**விண்ணப்ப் படிவத்தின் மென்பிரதிகள் பெற்றுக்கொள்ளக்கூடிய இணையத்தளங்கள்** http://edumin.np.gov.lk ,

தொடர்பு இலக்கம் - 021 222 2203 (அரச வேலை நாட்களில்காலை 9:00 - மாலை 4:00 வரை)

இறுதித்திகதி வரை காத்திராது இன்றே விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்தி எமக்கு அனுப்பி வையுங்கள்.

திறந்த போட்டிப் பரீட்சைகளுக்காக நுண்ணறிவு. மொழித்திறன். கிரகித்தல். பொதுஅறிவு வழிகாட்டல் செயலமர்வுகள் ZOOM மூலமாக இலவசமாக நடாத்தப்பட்டு வருகின்றன.

மேலும் பல போட்டிகள். பயிற்சி நெறிகள் மற்றும் செயலமர்வுகள் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இவ்விபரங்களை பெற்றுக்கொள்ள FB இனூடாக எம்முடன் இணைந்திருங்கள்.

FB Page: http://www.facebook.com\youthnorth

**இ.வரதீஸ்வரன்,**
**செயலாளர்,**
**கல்வி அமைச்சு, வட மாகாணம்.**

(c-4867)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவில் பாரிய பூகம்பம்!

## ♦46 பேர் உயிரிழப்பு
## ♦50 பேர் படுகாயம்

(பீஜிங்)

சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் நேற்று முன்தினம் மதியம் 12.25 மணியளவில் பாரிய பூகம்பம் ஏற்பட்டுள்ளது.

லுடிங் நகரில் இருந்து 39 கிலோ மீற்றர் தொலைவை மையமாகக் கொண்டு ஏற்பட்ட இந்த பூகம்பம் ரிக்டர் அளவில் 6.8 ஆக பதிவாகியுள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் அப்பகுதியில் உள்ள பல்வேறு கட்டடங்கள் அதிர்ந்தன.

பூகம்பத்தைத் தொடர்ந்து மக்கள் அலறியடித்துக் கொண்டு வீதிகளில் தஞ்சமடைந்தனர்.

இந்நிலையில், இந்த பூகம்பத்தில் 46 பேர் உயிரிழந்தனர்.

மேலும் 50 பேர் படுகாயமடைந்துள்ளனர். பூகம்பத்தால் மேலும் சிலர் மாயமாகியுள்ளதால் அவர்களை தேடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. (நி)



# தீவிரவாதிகளின் தாக்குதலில் சுமார் 35 பேர் உயிரிழப்பு

## மேற்கு ஆபிரிக்காவில் துயரம்

(புர்கினா பாசோ)

மேற்கு ஆபிரிக்க நாடான புர்கினா பாசோவின் சஹேல் பிராந்தியத்தில் பொதுமக்கள் சென்ற வாகனம் மீது தீவிரவாதிகள் நேற்று முன்தினம் நடத்திய குண்டுத் தாக்குதலில் குறைந்தது 35 பேர் கொல்லப்பட்டனர்.


37 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்ததாக ஹேல் பிராந்தியத்தின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

புர்கினா பாசோவில் கடந்த 7 வருடங்களுக்கு மேலாக கிளர்ச்சிக் குழுக்களுக்கும் அரச படைகளுக்கும் இடையே மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்த மோதலில் இதுவரை 2,000 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். சுமார் 19 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்நிலையில் போர் சாங்காவிற்கும் டிஜிபோவிற்கும் இடையிலான பகுதியில் பொதுமக்கள் சென்று கொண்டிருந்த வாகனம் மீதே தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். (நி)

# வடகொரியாவிடம் இருந்து ஆயுதங்களை வாங்கும் ரஷ்யா



(மொஸ்கோ)

வடகொரியாவிடம் இருந்து பீரங்கி உள்ளிட்ட பல ஆயுதங்களை ரஷ்யா வாங்குகிறது என அமெரிக்க உளவுத்துறை தெரிவித்துள்ளதாக நியூயோர்க் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்புப் போரில் ரஷ்யாவின் திறன் குறைந்து வருவதாகவும் அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகள் நியூயோர்க் ரைம்ஸிடம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் பீரங்கி குண்டுகள் மற்றும் ரொக்கெட்டுகளை உள்ளடக்கிய ஆயுதங்களை வடகொரியாவிடம் இருந்து ரஷ்யா வாங்கியுள்ளதாகவும் இது போன்ற மேலும் பல இராணுவத் தளபாடங்களை வாங்க ரஷ்யா திட்டமிட்டுள்ளதாகவும் உளவுத்துறை அதிகாரிகளை மேற்கோள்காட்டி நியூயோர்க் ரைம்ஸ் நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டுள்ளது.

உக்ரைனில் ரஷ்யாவின் இராணுவ ஆயுத தளபாடங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அத்துடன், மேற்கத்தேய நாடுகளில் ரஷ்யா மீதான தடைகளும் அந்நாட்டுக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பிரிட்டனின் பிரதமராக லிஸ் டிரஸ் தெரிவு



(லண்டன்)

கென்சவேர்ட்டிவ் கட்சியின் தலைமைப் பதவிக்காக இடம் பெற்ற கடுமையான போட்டியில் வெற்றி பெற்றுள்ள லிஸ் டிரஸ், பிரிட்டனின் அடுத்த பிரதமராகின்றார். ரிசிசுனாக்குடன் கட்சியின் தலைமைப் பதவிக்காக இடம் பெற்ற போட்டியில் லிஸ் டிரஸ் வெற்றி பெற்றுள்ளார்.

லிஸ் டிரசிற்கு கென்சவேர்ட்டிவ் கட்சியின் உறுப்பினர்கள் 81,326 பேரின் வாக்குகள் கிடைத்துள்ளன. ரிசிசுனாக்கிற்கு 60,399 வாக்குகள் கிடைத்துள்ளன.

லிஸ் டிரஸ் பிரிட்டிஸ் மகாராணியைச் சந்தித்து ஆட்சியமைப்பதற்கான வேண்டுகோளை விடுத்த பின்னர் பிரதமராக பதவியேற்பார். (நி)

# ஐரோப்பாவில் எரிவாயுவின் விலை ரொக்கட் வேகத்தில் அதிகரிப்பு

(மொஸ்கோ)

கடந்த வெள்ளிக்கிழமை ரஷ்யா தனது இறுதி குழாய் வழி எரிவாயு வழங்கலை முற்றாக நிறுத்தியிருப்பதுடன் ஐரோப்பாவில் எரிவாயுவின் விலைகள் ரொக்கட் வேகத்தில் அதிகரித்து இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐரோப்பிய நாடுகள் ரஷ்யா மீது ஏற்படுத்தியிருந்த தடை காரணமாக ஐரோப்பாவிற்கான எரிவாயு வழங்கலை நிறுத்தப்போவதாக தொடர் அறிவித்தல்களை வெளியிட்டு வந்த ரஷ்யா, கடந்த வெள்ளிக்கிழமை குழாய்களில் ஏற்பட்ட கசிவு காரணமாக மேற்படி வழங்கலை முற்றாக நிறுத்திக் கொள்வதாக அறிவித்தது.

இந்த நிலையில் ஐரோப்பாவிற்கான எரிவாயு இறக்குமதி முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதுடன் விலைகள் 30 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் இந்த விலைகள் எதிர்வரும் நாட்களில் மேலும் அதிகரிக்கும் வாய்ப்புகள் காணப்படுவதாகவும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. (நி)

# காபூலில் உள்ள ரஷ்யத் தூதரகம் அருகே குண்டுவெடிப்பு - இருவர் உயிரிழப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் உள்ள ரஷ்யத் தூதரகத்தின் அருகே நேற்று முன்தினம் திங்கட்கிழமை பாரிய குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாக ரஷ்ய செய்தி நிறுவனமான ஸ்புட்னிக் தெரிவித்துள்ளது.

இந்தக் குண்டுவெடிப்பில் ரஷ்யத் தூதரக ஊழியர்கள் இருவர் உயிரிழந்ததாகவும் ரஷ்ய தூதரகம் தெரிவித்துள்ளது.

இது தற்கொலை குண்டு வெடிப்பு என்று ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

எனினும், குண்டுவெடிப்பில் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் மற்றும் சேதங்கள் குறித்து ஆப்கானிஸ்தான் தரப்பில் இது வரை தகவல் வெளியிடப்படவில்லை.

2016இல், ரஷ்யத் தூதரகத்திற்கு அருகில் ஒரு குண்டு வெடித்தது. அச்சம்பவத்தின் போது, குறைந்தது 2 பேர் உயிரிழந்தனர் மற்றும் 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.


கடந்த இரண்டு நாட்களுக்கு வடமேற்கு ஆப்கானிஸ்தானில் உள்ள மசூதியில் நடத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதலில் [illegible] 20 பேர் உயிரி[illegible] (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வீழி/விழுதி

Botanical Name- Cadaba farinosa
Family- Cappariaceae



நிறைய கிளையுடைய பெருஞ்செடி, இளஞ்செடியில் மென்மையான ரோமங்கள் தண்டில் காணப்படும். முதிர்ந்த செடியில் தண்டுகள் மழுமழுப்பாக இருக்கும். தனியிலை, நீள்வட்டமாகவும் ஒன்றுவிட்ட அமைப்பிலும் காணப்படும். மங்கிய பச்சை நிறமுடையதாகக் காணப்படும். இலைக்காம்புகள் 2.5 - 4 மி.மீ நீளமானவை. பூக்கள் அழுக்கான வெள்ளை நிறமுடையவை. உருண்டையான கரகரப்பான பழங்கள். நிறைய விதைகளை கொண்டிருக்கும்.

மிகவும் அரிதான மூலிகையாகும். மனித நடமாட்டம் குறைந்த இடங்களில் கூடுதலாகப் பரம்பிக் காணப்படும். யாழ்.மாவட்டத்தில் அரிதான பரம்பலையே கொண்டுள்ளது.

இது ஒரு காயகற்ப மூலிகையுமாகும். வீழியின் காய்கள் மேற்றோல் பச்சையாக இருக்கும். அதனுள் செந்நிறமான சதைப்பகுதி காணப்படும். காய்கள் வைகாசியிலிருந்து ஆவணி மாதம் வரை செடிகளில் காணப்படும். வரட்சியைத் தாங்கி வளரக்கூடியது. ஒடியக் கூடிய இலைகளைக் கொண்டது. இதன் இலைகள் உடலுக்கு பலத்தைக் கொடுக்கக் கூடியது. 2-3 இலைகளை நன்கு கழுவி மென்று சாப்பிட்டாலே உடலுக்குப் பலத்தைக் கொடுக்கும்.

உதாரணமாக கைப்பிடி இலையினை எடுத்து உப்புத்தண்ணீரில் கழுவி பின்பு நல்ல நீரிலும் கழுவி வாயில் போட்டு மென்று சாப்பிட்ட பின்பு வேகமாக ஓடலாம். அதேவேளை அந்த வேகத்தை கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு உடலுக்கு பலத்தைக் கொடுக்கக் கூடியது.

முக்கியமாக சித்தர்கள் தாங்களே இந்த மூலிகையாக கற்ப மூலிகையாக பயன்படுத்தியுள்ளார்கள்.

இதனால் குடற்புழுக்கள், தோல் நோய்கள், கை, கால் குடைச்சல், சிறுநீரைப்பெருக்கு, சிரங்கு, மூட்டுவலி, சளி போன்ற நிலைமைகளில் பயன்படும் மருத்துவப் பண்புகள் நிறைந்த மூலிகையாகும்.

விழுது இலைகள் 2 உடன் மிளகு சேர்த்து மென்று சாற்றை விழுங்கி சக்கையை துப்பி விட வேண்டும். இதனால் களைப்பு, மூச்சுவாங்கல் குணமாகும்.

வீழி இலைகளைக் கொண்டு கூட்டு, சட்னி, ரசம் தயாரித்து பயன்படுத்தலாம். இவ்வாறு எடுக்க சளி, இருமல் குணமாகும். நுரையீரலை பலப்படுத்தக் கூடியது. விழுதி இலைச்சாறு 10 மில்லி அளவு எடுத்து 10 மி.கிராம் மிளகுத்தூள் சேர்த்து தினம் ஒரு வேளை 48 நாட்கள் சாப்பிட்டு வர பெண்களுக்கு கரு முட்டை நன்கு உருவாகும்.

குழந்தை பேற்றை உண்டாக்கும் தன்மை வாய்ந்தது இந்த வீழி மூலிகை.

வீழியிலைச் சாறு- 100 மில்லி நல்லெண்ணெய்- 200 மில்லி சேர்த்து ஒரு வாணலியில் விட்டு மெழுகுப் பதமாக காய்ச்சி ஆறவிட்டு தலைக்கு வைத்து 3 மணிநேரம் ஊறவிட்டு முழுகி வர மண்டைச்சளி, பினிசம் குணமாகும். மூக்கடைப்பிற்கும் கொடுக்கலாம்.

இதே தைலத்தை மூட்டு வலி, தோல் நோய்களுக்கும் வெளிப்பிரயோகமாக பயன்படுத்தலாம்.

வீழியிலைகள் ஒரு பங்கு எடுத்து 4 பங்கு நீர் விட்டு குடிநீர் காய்ச்சி வாய்கொப்பளித்து வர வாய்துர்நாற்றம், பல்வலி, பல்லீறுகளிலிருந்து இரத்தம் வடிதல் குணமாகும்.

சித்தர்கள் வீழியை அதிசய மூலிகை என்றும் குறிப்பிடுவர். வீழி முலிகையின் சரித்திரத்தில் போர் வீரர்களுக்கு உடல் ஆற்றலை கூட்டுவதற்காக கொடுக்கப்பட்டதாகவும் சரித்திரமுண்டு.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

உடம்பில் ஏற்படும் வளர், சிதை மாற்றங்களை சீராக்கக்கூடியது. வீழி பொதுவாக மருத நிலத்தில் (வயல் சார்ந்த இடம்) வளரக்கூடியது. யோகர் எனும் சித்தர் கரு வீழி எனும் ஒருவகை காய கற்ப மூலிகை மலையுச்சியில் காணப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலுப்பை எண்ணெய்- 200 மில்லி, தேங்காய் எண்ணெய்-200 மில்லி, வீழி இலைச்சாறு-400 மில்லி.

ஒன்று சேர்த்து ஒரு வாணலியில் இட்டு மெழுகுபக்குவத்தில் காய்ச்சி, வடித்து புட்டியில் வைத்துக் கொள்ளவும்.

மூட்டுவலி, மூட்டு வீக்கத்திற்கு பூசி வர நன்கு குணமடையும். இதன் காய்களை வற்றலிட்டுச் சாப்பிட்டு வர குடற்புழுக்கள் தீரும். ஜீரண மண்டலத்தை பலப்படுத்தும்.

# கோழி வளர்ப்பிற்கு உள்ளூர் தீவனம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

பொருளாதார சிக்கலில் சிக்கித் தவிக்கும் எமக்கு நமது உணவை நாமே உற்பத்தி செய்து இப்பேரிடரிலிருந்து எம்மையெல்லாம் காப்பாற்றிக் கொள்ள வழிகள் பலவுண்டு. அதனை நாம் விரைந்து செய்தல் காலத்திற்கேற்ற கைங்கரியமாக இருக்கும். கோழிமுட்டை மற்றும் இறைச்சி என்பனவற்றின் விலைகள் எகிறிச் செல்கின்றதனால் கோழி வளர்ப்பாளர்கள் ஒருவகையில் நன்மையடைந்தாலும் அதனை உணவாக கொள்பவர்களுக்கு விலையதிகரிப்பு மகிழ்வான செய்தியல்ல.

இந்த விலையதிகரிப்புக்கு காரணமாக கோழித்தீவனத்தை முதன்மைப்படுத்தலாம். கோழித்தீவனத்தை எம்மூரிலேயே உற்பத்தி செய்வதற்கான வாய்ப்பினை இங்கே தருகின்றேன். இது பற்றிய மேலதிக தகவல்கள் தேவையெனினும் அது பற்றி விரிவாக தர விரும்புகின்றேன். தீவனத்தின் உற்பத்தியில் சற்று கவனஞ்செலுத்தினால் முட்டையின் விலையை தளம்பலடையாது மக்கள் வாங்கி பயன்படுத்தும் குறைந்த விலைக்கு விற்கக்கூடிய வாய்ப்பு உண்டென்பதனை நாமெல்லோரும் உணரமுடியும். எமது உணவில் புரதச்சத்துடன் ஏனைய சத்துக்களை பெறக்கூடிய வாய்ப்பு கோழி இறைச்சி மற்றும் முட்டையில் இருப்பதனால் அதனது கிடைக்கும் தன்மையை அதிகரிக்கவும் விலை குறைத்து அனைத்து மக்களும் வாங்கும் நிலைக்கும் அதனை கொண்டுவர வேண்டும் என்பதும் இதனூடாக வெளிக்கொணரும் செய்தியாகும்.

கோழித்தீவனத்திற்கு இரு வகையான உணவினை நாம் உள்ளீடாக பயன்படுத்த முடியும். ஒன்று தானிய வகைகள். இன்னொன்று விலங்கு உணவுகள். எமது உணவுக்காகவும் கோழித் தீவனத்திற்கு தேவையான தானியங்களையும் பயிரிடாத நிலப்பரப்பில் பயிர் செய்வதை ஊக்குவித்தல் சிறந்தது. அவ்வாறான பயிர்களில் உழுந்து, பயறு, கௌபீ, பயற்றை, கொள்ளு, காட்டுக் கொள்ளு, சணல், குரக்கன், கம்பு, வரகு, சோளம்.... என பலவகையான பயிர் வகைகளை விளைவித்து தீவனத்தினை தயார் செய்து கொள்ளலாம்.

தீவனத்தின் மறுபகுதியாக கோழிக்குத் தேவையான புரதம் மற்றும் விற்றமின்களை வழங்குவதற்காக பூச்சி புழுக்களை உணவாக வழங்கலாம். இங்கே புழுக்கள் என்பன எமது பிரதேசத்தில் இயற்கையாகவே காணப்படும் அழுகிய சேதனப் பொருட்களில் தானாகவே தொற்றுதலாகி வளரக்கூடிய கறுத்த வேலையாள் ஈ( Black soldier fly) எனப்படும் ஒரு வகையான இலையான். உருவத்தில் பெரிதாக காணப்படுவதனால் இதனை குளவி எனவும் பலர் தவறாக கருதுவதுண்டு. இதற்கு கொட்டும் உறுப்பு [illegible] [illegible]யும் இந்த இலையான் ஏற்படுத்துவதில்லை. மேலும் இந்த இலையானின் இளம்பருவமான புழுப்பருவமே கோழிகளுக்கான சிறந்த தீவனமாக விளங்குகின்றது. முட்டையிடும் கோழிகள் மற்றும் இறைச்சிக்கான கோழிகளுக்கான உணவாக இந்த புழுக்களை அப்படியேயும் இன்னும் அரைத்து பவுடராக கோழியினது உணவில் கலந்தும் வழங்க முடியும். இது பற்றி விரிவான விளக்கங்களை தொடர்ந்து உங்களுக்கு தரவிருக்கின்றோம்.



## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

கோழி உணவாக இந்த புழுக்களை நீங்களே உங்கள் வீடுகளிலேயே உற்பத்தி செய்து வழங்க முடியும். வீட்டுத்தோட்டத்தில் கோழிவளர்ப்பில் ஈடுபடுபவர்களுக்கும் கோழிகளின் உணவாக இந்த புழுக்கள் சிறந்த தீனியாக அமையும். எமக்கிருக்கும் சேதனக் கழிவில் இலகுவாக வளர்க்கக்கூடிய இப்புழுக்களை வளர்த்து கோழிகளுக்கு மீன்வளர்ப்பில் மீன்களுக்கும் உணவாக சிறந்த புரதம் மற்றும் ஊட்டச்சத்து நிறைந்த உணவாக வழங்க முடியும்.

குறிப்பாக மரக்கறிக் கழிவுகள் இன்னும் பழங்களின் கழிவுகள் என்பனவற்றில் இலகுவாக மிகவும் சிறப்பாக இந்தப் புழுக்களை வளர்க்க முடியும். சேதனக் கழிவுகள் அழுகலடையத் தொடங்கும் போது இந்த இலையான் தானாகவே வந்து முட்டையிடும். முட்டை பொரித்து புழுக்கள் வெளிவந்த சேதனக் கழிவுகளில் வளரத் தொடங்கும். கோழிகளின் அளவுக்கேற்ப புழுக்களை உணவாக வழங்கலாம்.

தற்போதுள்ள விலை கூடிய தீவன நிலையில் இப்புழுக்களை வளர்த்து கோழி வளர்ப்பை தொடர்ந்து இலாப மூட்டும் தொழிலாக செய்ய முடியும். விபரங்கள் தொடர்ந்து உங்களுக்காக அடுத்த வாரம் வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவில்

# சூரிய சக்தி மூலமான மின்திட்டம் ஆரம்பித்து வைப்பு



(முல்லைத்தீவு)

யூ.என். ஹெபிடாட் (UN HABITAT) நிறுவனமானது முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு பசுமைக் கட்டடம் சார் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கான அவசர உதவி முயற்சி திட்டத்தின் கீழ் சூரிய சக்தி மூலமான மின்சக்தி திட்டத்தினை முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று ஆரம்பித்து வைத்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட செயலக அரியாத்தை மாநாட்டு மண்டபத்தில் காலை 10 மணிக்கு திட்ட அறிமுகம் மற்றும் திட்ட நடைமுறைகள் தொடர்பான விளக்கமளிப்பினைத் தொடர்ந்து மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதனால் உத்தியோக பூர்வமாக குறித்த திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (4)

## வவுனியாவில் அதிக மழைவீழ்ச்சி பதிவு

(நெளுக்குளம்)

வவுனியாவில் இவ்வருடம் ஜனவரி முதல் ஓகஸ்ட் வரையான காலப்பகுதியில் 931.2 மில்லி மீற்றர் அதிக மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மாவட்ட வளிமண்டல நிலைய பொறுப்பதிகாரி தா.சதானந்தன் தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் 2022 ஜனவரி முதலாம் திகதியிருந்து ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 931.2 மில்லி மீற்றர் அதிக மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதுடன் குறித்த காலப்பகுதியில் ஏப்ரல் மாதம் 356.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியே அதிக மழை வீழ்ச்சியாக பதியப்பட்டுள்ளது என தெரிவித்தார். (4-299)

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவரிடம்

# கைக்குண்டு ஒன்று மீட்பு

(தருமபுரம்)

தருமபுரம் உழவனூர் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டார். தருமபுர பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய இக் கைது நடவடிக்கை இடம் பெற்றுள்ளது.

அவரிடம் மேற்கொண்ட சோதனையின் போது அவரது உடைமையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கைக்குண்டு மீட்கப்பட்டது. குறித்த கைக்குண்டை கைவிடப்பட்ட பகுதி ஒன்றில் இருந்து மீட்டதாகவும் அதனை பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்காக வைத்திருந்ததாகவும் சந்தேக நபர் தெரிவித்தார்.



அதனை அடுத்து குறித்த நபர் 14 நாட்கள் தடுப்பு காவலில் வைக்கப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை தருமபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-316)

# ஏமாற்றி யாசகம் பெற்றவர் எச்சரித்து விடுவிப்பு

(மன்னார்)

மன்னார் நகர்ப் பகுதியில் கால் இல்லாதவர் போல் நடித்து யாசகம் பெற்றுவந்த ஒருவரை அப்பகுதி இளைஞர்கள் கையும் களவுமாக பிடித்து எச்சரித்து அனுப்பியுள்ளனர்.

மன்னார் நகர்ப் பகுதிகளில் அண்மைகாலமாக சிறு பிள்ளைகளுடனும் மாற்றாற்றல் உடையவர்களை போலவும் நடித்து யாசகம் கேட்கும் சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றது.

மன்னார் பகுதியை சாரத அதிகமானவர்களே மேற்படி ஏமாற்றி யாசகம் பெற்று வருவதுடன் யாசகம் வழங்காதவர்களை அநாகரிகமாகத் திட்டுவதையும் அவதானிக்க கூடியதாக உள்ளது.

இந்த நிலையிலே நேற்று கையும் களவுமாக பிடிக்கப்பட்டு போலியாக ஏமாற்றிய நபர் எச்சரிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளார். (4-285)

# கனடா செல்ல முயன்ற 11 பேர் இந்தியாவில் கைது

(சென்னை)

இலங்கையில் இருந்து விமானம் மூலம் தமிழகம் சென்று அங்கிருந்து கனடா செல்ல முயன்ற 11 பேர் இந்தியாவின் கியூப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் முல்லைத் தீவைச் சேர்ந்த இளைஞர்களே கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த மாதம் 19 ஆம் திகதி விமானம் மூலம் சென்னைக்குச் சென்றவர்கள் அங்கிருந்து கேரளாவின் கடற்கரை நகரான கொள்ளம் பகுதிக்குச் சென்றுள்ளனர்.

அங்கே விடுதியில் தங்கியிருந்த வேளையே கைது செய்யப்பட்டுள்ளனர். விசாரணைகளின் போது அவர்கள் கனடா செல்ல முயற்சித்தமை தெரியவந்துள்ளது. (4)

# கஞ்சாவுடன் இருவர் கைது

(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளாலி பகுதியில் நேற்று முன்தினம் இரவு 37 கிராம் கஞ்சாவுடன் இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் கஞ்சாவையும் பொலிஸாரிடம் ஒப்படைக்கவுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர். (4-316)


# கேள்வி அறிவித்தல்

## சபை நிதி வேலைத்திட்டம்-2022

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை

1. பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் சபை நிதி குறித்த வேலைத்திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. **தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் சிடா (CIDA) பதிவினை மேற்கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். தேவையான தகைமைகள், **கேள்வி ஆவணம் பகுதி 4 இல்** குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை** (Schedule5) **கேள்வி ஆவணம் பகுதி 5** இல் காட்டப்பட்டுள்ளது.
5. குறித்த பெறுகை 03/2020 , 03/2020 (i) இலக்கங்களை உடைய 09.10.2020, 11.01.2021 ஆம் திகதிகளின் பொதுநிதி சுற்று நிருபங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-205-0037 , தொலைநகல் 021-205-0036 , E-Mail: pallaips@gmail.com)** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை **09.00** மணி முதல் **14.00** மணி வரை **07.09.2022** ஆம் திகதியிலிருந்து **20.09.2022** ஆம் திகதிவரை ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** எனும் இடத்திலிருந்து **07.09.2022** ஆம் திகதியிலிருந்து **20.09.2022** ஆம் திகதிவரை அலுவலக நாட்களில் மட்டும் காலை **09.00** மணிக்கும் **14.00** மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. **2,000/-** (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் இரு பிரதிகளில் தயாரித்து **தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** எனும் முகவரிக்கு **20.09.2022** ஆம் திகதி மாலை **14.00** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை VAT நீங்கலாக (Rs Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விகள் செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(3)/PL/03/cf/2022/ith. Turf | Lanscape work for Iththavil children park at Pallai | 0.347 Mn | 30 நாட்கள் | C9 and above (building) | 49 days from bid open (09.10.2022) | 4,000.00 | 06.11.2022 |

10. கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் **13.09.2022** ஆம் திகதி காலை **10.30** மணிக்கு **பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.
11. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**சுப்பிரமணியம் சுரேன்**
**தவிசாளர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,**
**பளை.**

(C-4872)

**07.09.2022**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 98

# வலிகள் தான் வாழ்க்கை

தினசரி மார்க்கெட் போவதும் பழம் வாங்குவதும் வழக்கமாக நடப்பது. ஒரு பாட்டி பல வருடங்களாக ஒரே இடத்தில், ஒரு டிபார்மெண்ட் ஸ்டோர் முன்பு பழ வியாபாரம் செய்து கொண்டு இருப்பார்.

ஆபிஸ் போகவர பார்ப்பேன். பாட்டியும் பார்க்கும்.சரி, இந்த பாட்டியிடம் வாங்கலாம் என்று முடிவு செய்து போனேன்."மாம்பழம் எப்படி பாட்டி?" "எடு கண்ணு. கற்கண்டு மாதிரி இருக்கும்"."எவ்வளவு?"கிலோ 70 ரூபா. நீ 60 ரூபா கொடு போதும்."60 அதிகமோ மனசு பேரம் பேசியது."அம்பது போட்டு 2 கிலோ கொடு"

"கட்டாது சாமி. அசலே 55 ரூபா வருது."சரி,வேண்டாம், அப்புறம் வர்றேன்.நகர முற்படும்போது "சரி எடு ராசா. காலைல மொத வியாபாரம்" 3கிலோ வாங்கினேன். ஆஹா நல்ல பேரம், மனசு குதூகலித்தது.மறுநாள் டிபார்ட்மெண்ட் ஸ்டோருக்கு போனேன்.

அதனுடன் சேர்ந்த மாதிரி பழமுதிர்ச்சோலை. பழங்கள் நேர்த்தியாக அடுக்கி அழகாக இருந்தன.அதே பாட்டியிடம் வாங்கியது போலவே இருந்தது. என்ன விலை?

கிலோ 80 என்று எழுதியிருந்தது."ஏம்மா கிலோ என்ன விலை?" 80 ரூபா" இங்கே பேரம் பேச முடியாது. ஒரே விலை. அப்போ, பாட்டியிடம் 50 ரூபாய்க்கு பேரம் பேசி வாங்கி, அதை பெருமையாக வீட்டில் சொல்லி, ஏனோ மனசு வலித்தது.

மாலை வரும்போது பாட்டியை பார்த்தேன். மெலிதான தேகம். சுருக்கம் நிறைந்த முகம். நடுங்கும் கைகள். ரோட்டில் பழ வியாபாரம்.

என்னை அறியாமல் கால்கள் நின்றது. பாட்டியுடன் இன்னும் இரண்டு வயதான பாட்டிகள். டீ குடித்து கொண்டு இருந்தார்கள்.சரி,பாட்டியிடம் வேறு ஏதாவது வாங்கலாம் என கவனித்தேன்.

பாட்டி, பக்கத்து பரோட்டா கடையிலிருந்து இரண்டு பார்சல் வாங்கி அவர்களிடம் கொடுக்க அவர்களும் வாங்கி கொண்டு தடுமாறி எங்கோ நடந்து போனார்கள்.

யார் இவர்கள்?பாட்டியிடம் கேட்டேன்.

"அவுங்களா? நம்ம ஊருதான். நல்லா வாழ்ந்து கெட்டவிங்க.புருஷன் போனதும் புள்ளமார்கள் கண்டுக்கல. பணத்தையெல்லாம் புடுங்கிகிட்டு முடுக்கி விட்டுட்டாங்க.

ஒருத்தி என்னோட நாத்தனாரு. வயல் வேலைக்கு போயிட்டிருந்தாங்க. இப்ப முடியல. பகல்ல கோவில் அன்னதானம் சாப்பிடுவாங்க. ராத்திரி இங்க வருவாங்க. ஏதோ நான் முடிஞ்சத வாங்கி தருவேன்.

என் குடிசைல தான் அண்டி இருக்குதுங்க. வரவர என் கையிலயும் ஓட்டம் இல்ல. அதுக்காக அதுங்கள பட்டினி போட முடியுமா?

அதான் முடிஞ்சத வாங்கி தாரேன். இதுகளுக்கு நான் தொணை. எனக்கு இவங்க தான் தொணை.

உனக்கு புள்ளைங்க இருக்கா?எனக்கு அந்த வரம் கெடக்கல கண்ணு. எனக்கு புள்ள இல்லேனு எம்புருஷன் அப்பவே என்னை வுட்டுபுட்டு போயிட்டான்.

அப்பனும் ஆத்தாளும் போனபொறவு ஒண்டிகட்டையா காலத்தை ஓட்டிகிட்டு இருக்கேன்.அதுக்காக செத்தா போகமுடியும் கண்ணு? பொறவு, இதுங்க எங்கிட்ட வந்து ஒட்டிக்கிச்சுங்க. ஏதோ பழவியாபாரம் பண்ணி, கெடைக்கிறத வச்சு வயித்த கழுவிட்டு இருக்கோம்"

மனது வலித்தது. பாட்டி சொன்னது ஆயிரம் பாடங்களை கற்று கொடுத்தது. வலிகளே வாழ்க்கையாகி போனது.

வறுமையிலும் நேர்மை, ஏழ்மையிலும் தர்ம சிந்தனை, என் MBA என்னை பாத்து சிரித்தது. இவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும். வாழ்க்கை பாடம் கற்றுக்கொடுத்து இருக்கிறார்கள்.

"பாட்டி ஏதாவது உதவி வேணுமா" பணம் ஏதாவது தரட்டுமா"

வேண்டாம் கண்ணு. ஏதோ பாரியூர் அம்மன் படியளக்கிறா அவங்களுக்கு தான் மாத்து துணி இல்ல. அவங்களுக்கு வேணா ஏதாவது பண்ணு"

சரி,செய்வோம்."பாட்டி! இதுல 2000 இருக்கு. இதுல வாங்கி கொடுத்துரு" 'எதுக்கு இவ்வளவு பணம் கண்ணு? 500 போதும்". மீதியை திருப்பிக் கொடுத்தது "இல்ல பாட்டி.

இருக்கட்டும். எங்க அம்மா இருந்தா வாங்கி தர மாட்டேனா?"கண்கள் கலங்கியபடி வாங்கினாள்.மனசு கொஞ்சம் லேசானது.என் அம்மா சொல்வாள். "மற்றவர்கள் துன்பங்களை கேட்டால் மட்டும் போதாது. முடிந்த உதவிகளை செய்யணும்".

கிளம்பும்பொழுது பாட்டியிடம் கேட்டேன். "பாட்டி ஆப்பிள் எப்படி?

கிலோ 120. நீ 110 கொடு சாமி."100 ரூபா போட்டு 3 கிலோ போடு"

தமாசுக்கு தான் கேட்டேன். பாட்டியின் முகம் சட்டென்று வாடி விட்டது.

"சரி கண்ணு. ஏதோ மகராசன் எங்கிட்ட வந்து வாங்குறியே"3 கிலோ வாங்கி 450 ரூபாய் கொடுத்தேன்."எதுக்கு இவ்வளவு பணம் கண்ணு"

இல்ல பாட்டி, இதையே பழமுதிர்சோலைல வாங்குனா 450 கொடுத்திருப்பேன். அதான்."பாட்டி முகத்தில் முதன்முறையாக சிரிப்பு.

இனி வீதியில் வியாபாரம் செய்யும் வயதானவர்களிடம் "மட்டும்" பேரம் பேசக்கூடாது. பாவம், சொல்ல முடியாத வலிகளோடு வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.வலிகள் தான் வாழ்க்கை அவர்களுக்கு!

**அன்பு வாசகர்களே!**
**முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.**

# ஞாபகமறதி நோயாளர்களின் எண்ணிக்கை நாட்டில் அதிகரிப்பு

## மருத்துவத்துறை புள்ளி விபரங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் ஞாபகமறதி நோயாளர்களின் எண்ணிக்கை பாரியளவில் அதிகரித்து வருவதாக மருத்துவத்துறை புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.**

செப்டம்பர் மாதம் சர்வதேச ஞாபகமறதி நோயாளர்களுக்கான மாதமாகவும் செப்டம்பர் 21 ஆம் திகதி சர்வதேச ஞாபக மறதியாளர்கள் தினமாகவும் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கையிலும் ஞாபகமறதி நோயாளர்களின் எண்ணிக்கை பாரியளவில் அதிகரித்து வருவதாக இலங்கை அல்சைமர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தநிலை இப்படியே அதிகரிக்கும் பட்சத்தில் எதிர்வரும் 2050 ஆம் ஆண்டளவில் இலங்கையில் அரை மில்லியனுக்கும் அதிகமான ஞாபகமறதி நோயாளர்கள் காணப்படக்கூடும் எனவும் அச்சங்கம் எதிர்வு கூறியுள்ளது.

கடந்த காலங்களில் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையை முடக்கிப் போட்ட கொரோனாத் தொற்று காரணமாகவும் ஞாபகமறதி நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அல்சைமர் சங்கத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## 8 நாட்களாக காத்திருக்கும் கப்பல்

# ஒரு நாளைக்கான தாமதக்கட்டணம் 75 ஆயிரம் அமெரிக்க டொலர்கள்

(கொழும்பு)

ஒரு இலட்சம் மெற்றிக் தொன் கச்சா எண்ணெய் கொண்ட கப்பலொன்று இலங்கை கடற்பரப்பில் காத்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த கச்சா எண்ணெய் கப்பலுக்கு பணம் செலுத்த முடியாத நிலையில் 8 நாட்களாக கப்பல் காத்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

யூரல் நிறுவனத்துக்குச் சொந்தமான இந்தக் கப்பல் ஓகஸ்ட் 23 ஆம் திகதி இலங்கையை வந்தடைந்ததுடன், பணம் செலுத்த முடியாத காரணத்தினால் இன்னும் கடலிலேயே உள்ளது.

எண்ணெய் நிறுவன வட்டாரங்களின் படி, தாமதக் கட்டணமாக ஒரு நாளைக்கு 75,000 அமெரிக்க டொலர்கள் செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்படுகின்றது.

கோரல் எனர்ஜி நிறுவனத்தினால் இலங்கைக்கு கொண்டு வரப்படவிருந்த 128, 000 மெற்றிக் தொன் கச்சா எண்ணெய்க்கு பதிலாக இந்த கப்பல் வந்துள்ளது.

இந்த யூரல் கப்பலின் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு பணியின் போது 52 சதவீதம் கறுப்பு எண்ணெய், 21 சதவீதம் டீசல் மற்றும் 12 சதவீதம் பெற்றோல் பெறப்படும் என்று அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்த கச்சா எண்ணெயின் அடர்த்தி அதிகரிப்பால், 50 ஆண்டுகளுக்கும் மேலான சுத்திகரிப்பு ஆலைக்கு செல்வதால், சுத்திகரிப்பு நிலையத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (நி)

## அதிக விலைக்கு முட்டை விற்றவர் கைது

### ஒரு இலட்சம் அபராதம்

(அநுராதபுரம்)

முட்டையை அதிக விலைக்கு விற்பனை செய்த வர்த்தகர் ஒருவர் நுகர்வோர் அதிகார சபையால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரை அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

மேலும் முட்டை கையிருப்பை பறிமுதல் செய்யவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (நி)

## டொலரில் வீடு வாங்கினால் 10 வீத தள்ளுபடி-பிரசன்ன ரணதுங்க



(கொழும்பு)

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்படும் நடுத்தர வருமான வீட்டுத் திட்டங்களில் டொலர்களைக் கொண்டு வீடுகளை வாங்குவோருக்கு 10 சதவீத தள்ளுபடி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு இந்த வீடுகளை டொலர்கள் மூலம் கொள்வனவு செய்வதற்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் டொலர் பிரச்சினைக்குத் தீர்வாக இந்த புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



## யாருக்கு சகுனம்

இந்திரபுரியை இந்துவர்மன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவன் மாதமொரு முறை காட்டிற்குப் போய்க் கொடிய மிருகங்களை வேட்டையாடுவது வழக்கம்.

ஆனால், ஒரு முறை தொடர்ந் தாற் போல் ஆறு மாதங்களுக்கு வேட்டையாடப் போக முடியவில்லை. காரணம் அரசாங்க அலுவல்களில் மூழ்கி விட்டது தான்.

இனி அதிக வேலை இல்லை எனக் கண்டு அவன் ஒரு நல்ல நாளாகப் பார்த்து வேட்டைக்கு கிளம்பினான். அவன் தன் பரிவாரங்களோடு கோட்டை வாசலுக்கு வந்த போது எதிரே ஒரு விறகு வெட்டி கோடாலியும் கையுமாக வருவதைக் கண்டான்.

இந்துவர்மன் அவனை நிறுத்தி "அட அறிவற்றவனே! வெகு நாட்களுக்குப் பிறகு ஒரு நல்ல நாள் பார்த்து நான் வேட்டைக்குக் கிளம்பும் போது அபசகுணமாக நீ எதிரே வருகிறாயே. இன்று மட்டும் என் வேட்டை நல்ல விதமாக நடக்காவிட்டால் நான் திரும்பி வந்து உன் தோலை உரித்து விடுவேன்" என்று எச்சரித்து விட்டுப் போனான்.

அந்த விறகு வெட்டியின் பெயர் கட்டையன். அவன் அன்று தான் மன்னனுக்கு எதிராக வந்து அபசகுணமானது தலைவிதியே என்று தன்னைத்தானே நொந்து கொண்டான்.

மன்னனுக்கு அன்று வேட்டையாடப் பல மிருகங்கள் கிடைக்க வேண்டுமென்று அவன் கடவுளை வேண்டிக் கொண்டான்.

அன்று இந்துவர்மனுக்கு வேட்டையில் பல மிருகங்கள் கிடைத்தன. ஒரு .சிங்கம், நான்கு புலிகள், சில காட்டுப் பன்றிகள் என்று பலவற்றை மன்னன் அடித்துக் கொன்றான்.

இது தன் முன் விறகு வெட்டி எதிரே வந்த சகுணத்தால் ஏற்பட்ட நற்பலன் என அவன் மகிழ்ந்தான்.

வேட்டையிலிருந்து திரும்பிச் சென்ற இந்துவர்மன் கட்டையனை அழைத்து வரச் சொல்லி அவன் வந்ததும் "நான் வேட்டைக்குப் போகும் போது உன்னைப் பார்த்ததால் தான் எனக்கு வேட்டையில் பல மிருகங்கள் கிடைத்தன.

நீ காட்டிற்குப் போனாயே, உனக்கு என்ன கிடைத்தது?" எனக் கேட்டான்.

கட்டையனும் "அரசே! நேற்று உங்களை முதலில் நான் கண்டதால் பெரிய பெரிய மரங்களை என் கோடாலி அநாயாசமாக வெட்டி வீழ்த்தியது. இதனால் எனக்கு தினமும் கிடைக்கும் பணத்தை விட இரு மடங்கு அதிகமாகக் கிடைத்தது.

நாங்கள் தங்களை வாழ்த்திக் கொண்டு நேற்றிரவு வயிறு நிறைய உண்டோம்" என்றான்.

(தொடரும்)

# சிலப்பதிகாரம்

## மாதவியின் கடிதம்

## மாதவியை உணர்ந்தான்




பாவம் உங்கள் மேல் மிகுந்த அன்பும் மரியாதையும் வைத்திருக்கிறாள். அவளுடைய கண்ணீர் என்னையும் வருத்தம் அடையச் செய்துவிட்டது. என்றான். கோவலனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான்.

கோவலனின் மனநிலையில் கொஞ்சம் தெளிவு வந்திருந்தது. வசந்தமாலையாக வந்த கானுறைத் தெய்வம் சொன்னவை நினைவு வந்தது. முற்பிறப்பின் பலன்கள் என்று கவுந்தி அடிகள் சொன்னது நினைவுக்கு வந்தது. மாதவி என்ன தான் சொல்கிறாள் பார்ப்போமே என்கிற ஆவலும் எழுந்தது. கடிதத்தைப் பிரித்தான் படித்தான்.

உங்கள் கால்களில் விழுந்து வணங்குகி றேன்.

"நான் எழுதியிருப்பவை தெளிவில்லாமல் இருக்கலாம். மன்னியுங்கள் தயவுசெய்து கொஞ்சம் சிரமப்பட்டாவது என் மனநிலையைப் புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள்

உயர்குடியிலே பிறந்து உயர்வான குணங்களோடு இருக்கிற கண்ணகியுடன் இரவோடு இரவாக நீங்கள் புறப்பட்டுச் சென்றீர்கள். வயது முதிர்ந்த உங்கள் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமைகளை மறந்தீர்கள். அவர்களை வருத்தத்தில் ஆழ்த்தி விட்டுப் போகத் துணிந்தீர்கள்.

இப்படியெல்லாம் உங்களைச் செய்யத் தூண்டுகிற அளவுக்கு நான் செய்த தவறு என்ன? உங்களுக்கு அவப்பெயர் வராமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இரண்டு மூன்று வாக்கியங்கள்தான் எழுதியிருந்தாள் என்றாலும் அது வெறும் கடிதமாகத் தோன்றவில்லை. கோவலனுக்கு மாதவியின் மனத்தையே படித்த மாதிரி உணர்ந்தான்.

கெட்டாலும் மேன் மக்கள் மேன்மக்களே என்பதற்கு உதாரணமானவன் கோவலன் மாதவியின் அழகி லும் அவள் காட்டிய அன்பிலும் மயக்கத்தில் இருந்தவன்தான். மதுவின் மயக்கமும் மாதுவின் மயக்கமும் அருந்துகிறவரைதான். நிறுத்தினால் சில மணி நேரங்களில் தெளிந்து விடும்.

கோவலன் தெளிந் திருந்தான்.

கண்ணிகி குறித்த பெருமிதம் கோவலனுக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் குறைந்ததில்லை அந்தப் பெருமிதம் தான் ஒரு நிலையில் குற்ற உணர்வாக மாறியது. கானல் வரிகளில் அவனை அறியாமல் வந்து விழுந்த வார்த்தைகளுக்குக் காரணமும் அந்த உணர்வுதான்.

இப்போது கண்ணகி குறித்து மாதவி வைத்திருந்த உயர்ந்த எண்ணத்தை உணர்ந்தவுடன் அவனுக்கு மாதவி மேல் இருந்த கோபம் மாறி விட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியே ஆட்சியின் உயிர்.
நடுநிலைமையே நீதியின் உயிர்.
~ ஜஸ்டினியன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்களுக்கு எதிராக அமைச்சர் அலி சப்ரி

தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்பதைக் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் மக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

உள்ளக விசாரணையில் ஒருபோதும் தமக்கு நீதி கிடைக்க மாட்டாது என்ற அடிப்படையிலேயே சர்வதேச விசாரணையை தமிழ் மக்கள் கோரி நிற்பது அனைவரும் அறிந்ததே.

எனினும் உள்ளக விசாரணை என்பதைக் கூறி, காலம் கடத்துவதைத் தவிர போர்க்குற்ற விசாரணை தொடர்பில் இலங்கை ஆட்சியாளர்கள் வேறு எதுவும் செய்யவில்லை.

மேலாக, தமிழ் மக்களைப் படுகொலை செய்த படையினருக்குப் பொதுமன்னிப்புக் கொடுத்து, அவர்களுக்கு விடுதலை வழங்குகின்ற அளவிலேயே இந்த நாட்டின் ஆட்சி அதிகாரம் உளது.

தவிர, போர்க்குற்ற விவகாரம் ஐ.நா மனித உரிமை ஆணையத்தில் பிரஸ்தாபிக்கப்படும் போதெல்லாம் விசாரணை நடத்தப்படும். விதிக்கப்பட்ட நிபந்தனைகள் நிறைவேற்றப்படும் என்று கூறி, ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தை ஏமாற்றுவதே இலங்கை ஆட்சியாளர்களின் தொழிலாகிவிட்டது.

நிலைமை இதுவாக இருக்கையில், சர்வதேச விசாரணை தவிர்ந்த வேறு எதுவும் தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுத் தரமாட்டாது என்பதே உண்மை.

இந்நிலையில் சர்வதேச விசாரணையை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்றும் உள்ளகப் பொறிமுறையூடாகவே விசாரணை நடத்தப்படும் என்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கூறியுள்ளார்.

அமைச்சுப் பதவிக்காக அரசாங்கத்துடன் சேர்ந்து தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படுவதை இந்த நாட்டின் சிறுபான்மையான முஸ்லிம் இனத்தவர்கள் ஒருபோதும் செய்யக்கூடாது என்பதுதான் நம் தாழ்மையான கருத்து.

ஏனெனில் தமிழ் மக்களுக்கு நேர்ந்த அதே கதி முஸ்லிம் மக்களுக்கும் ஏற்படலாம்.

உண்மையில் இந்த நாட்டில் தமிழ் மக்கள் உரிமைக்காக ஆயுதப் போராட்டம் நடத்திய தன் காரணமாகவே முஸ்லிம் மக்களின் உரிமை ஓரளவேனும் பாதுகாக்கப்பட்டது.

எங்கள் பிரச்சினையை அப்படியே விட்டுவிட்டு, சிங்கள ஆட்சியாளர்களுடன் கூட்டுச் சேர்ந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்று வாழலாம் என்று தமிழ் மக்கள் நினைத்திருப்பார்களாயின், இந்த நாட்டில் முஸ்லிம் இன அடையாளமே இருந்திருக்க மாட்டாது. இதுவே உண்மை.

இந்த உண்மையை தெரிந்திருந்தும் அமைச்சர் அலி சப்ரி தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படுவதும் சர்வதேச விசாரணையைத் தடுப்பதும் அவ்வளவு நல்லதல்ல.

கொரோனாத் தொற்றினால் இறந்த முஸ்லிம்களை எரியூட்டுமாறு அரசாங்கம் பணித்த போது, அது விடயத்தில் முஸ்லிம் நாடுகள் தலையிட வேண்டும். இலங்கை மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்று கூப்பாடு போட்ட ஓர் இனம்; தமிழ் மக்கள் என்று வரும்போது சர்வதேச விசாரணையைத் தடுப்பது எந்தவகையிலும் நியாயமாகாது என்பதை அமைச்சர் அலி சப்ரியும் முஸ்லிம் சகோதரர்களும் உணர்ந்தாக வேண்டும்.

## பாணின் விலை மேலும் அதிகரிக்கப்படாது

### பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

டொலர் நெருக்கடி நிலைமை காரணமாக இரண்டு பெரிய கோதுமை மா நிறுவனங்கள் உற்பத்தியை குறைத்தமையே கோதுமை மா தட்டுப்பாட்டிற்கு காரணமாகும் என்றும் எதிர்காலத்தில் பாணின் விலை அதிகரிக்கப்படமாட்டாது என்றும் அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வர்த்தக அமைச்சருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஏன்.கே. ஜயவர்தன கூறுகையில்,

இரண்டு பெரிய நிறுவனங்கள் போதுமான அளவு கோதுமை மாவை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

சந்தையில் கோதுமை மாவுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு காரணமாக கோதுமை மாவின் விலை அதிகரிப்பு ஏற்பட்டது.

அதன் காரணமாகவே ஒரு இறாத்தல் பாணின் விலை அதிகரிக்கப்படும் என்று அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் அறிவித்திருந்தது. எனினும் இரண்டு பெரிய நிறுவனங்களும் போதுமான அளவு கோதுமை மாவை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதை அடுத்து பாணின் விலை அதிகரிக்கப்படமாட்டாது என அவர் தெரிவித்தார். (நி)

## விருந்துபசாரத்தில் பங்கேற்ற ஐந்து மாணவர்களுக்கு முழந்தாள் தண்டனை

(கொழும்பு)

திருமண வீட்டுக்குச் சென்று அங்கு விருந்துபசாரத்தில் பங்கேற்ற பாடசாலை மாணவர்கள் ஐவருக்கு முழந்தாள் தண்டனை வழங்கப்பட்டு, அந்த ஐவரையும் பொலிஸில் ஒப்படைக்கப்பட்ட சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், வெலிகம நகர சபையின் மண்டபத்தில் நடைபெற்ற திருமண விருந்துபசாரத்துக்கு அழைக்காத விருந்தாளிகளாக சென்றிருந்த பாடசாலை மாணவர்கள் ஐவருக்கே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

நகர சபைக்கு அண்டியதாக வசித்துவரும் 12, 13,16 மற்றும் 17 வயதுகளைச் சேர்ந்தவர்களுக்கே இவ்வாறு முழந்தாள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், நகர சபையின் மேயரின் அறிவுறுத்தலுக்கு அமைய, அங்கு வந்த பொலிஸார், பல மணிநேரத்துக்குப் பின்னர், அந்த ஐந்து மாணவர்களையும் மீட்டுள்ளனர். சம்பவத்துக்கு முகங்கொடுத்த மாணவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்தத்திருமண வைபவத்துக்காக கூடுதலான பேர் சமைத்தனர். அதில் மீதப்படும் உணவை உட்கொள்வதற்காக சென்றோம். இதற்கு முன்னரும் இவ்வாறு சென்றிருக்கின்றோம்.

சமையல் செய்யும் மாமா ஒருவர் எங்களை நேற்று அழைத்து சாப்பிட்டுவிட்டுச் செல்லுமாறு கூறினார். நாங்கள் ஐவரும் சென்றபோது, அங்கிருந்த ஒருவர் கொஞ்சம் இருக்குமாறு கூறினார். அப்போது வந்த மேயரும் சிலரும் எங்களை அழைத்துச் சென்று படிக்கட்டுகளில் முழந்தாளிட வைத்தனர் என்றனர். (ம-7)

## இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் இலங்கையர்களுக்கு அரச காணி வழங்க நடவடிக்கை

இந்தியாவில் இருந்து இருந்து இலங்கை திரும்பும் வடமாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு அரச காணி வழங்குவதற்கு வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாக தமிழ்நாட்டில் சுமார் 58 ஆயிரம் மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ள நிலையில் அவர்களில் சுமார் 3 ஆயிரம் பேர் மீள இலங்கைக்கு திரும்பவுள்ளனர்.

ஏற்கனவே ஒரு பகுதியினர் இலங்கைக்கு திரும்பியுள்ள நிலையில் படிப்படியாக தாய் நாட்டுக்கு வருகைதருபவர்களுக்கு சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப் படவுள்ளது. (ம-7,104)

## ஸ்ரீ உலகளந்த விநாயகர் ஆலய சப்பைரத வெள்ளோட்டம்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு ஸ்ரீ உலகளந்த விநாயகர் ஆலய தேவஸ்தான வருடாந்த மகோற்சவத்தில் இன்று 7 ஆம் திகதி சப்பைரத வெள்ளோட்டம் இடம்பெறவுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு ஸ்ரீ உலகளந்த பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவமானது கடந்த 1 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

குறித்த சப்பைரத வெள்ளோட்டமானது இன்று காலை 10.44 தொடக்கம் 11.55 வரையிலான சுப வேளையில் இடம்பெறவுள்ளது.

அத்தோடு நாளை சப்பைரத உற்சவமும், நாளை மறுநாள் தேர் உற்சவமும் இடம் பெற்று 10 ஆம் திகதி விநாயகப் பெருமான் தீர்த்தமாடி, கொடி இறக்கத்துடன் மகோற்சவம் நிறைவு பெறும். (4-299)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வியாழன் காலை 8.00 மணியிலிருந்து மாலை 17.00 மணிவரை

**வவுனியா பிரதேசத்தில்** ஜீவன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை- காத்தான் கோட்டம், மகாறம்பைகுளம், மறக்கறம்பளை-கணேசபுரம் ஆகிய இடங்களிலும் **யாழ்.பிரதேசத்தில்** மட்டுவில் வீதி புத்தூர், ஊறணி, வீரவாணி ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** சி.இ.சி.பி (சிலாவத்துறை), சிலா[illegible] [illegible] நீர் வ்ழுங்கல் சபை, நீர் வழங்கல்,முருங்கன், லைவ் ஸ்டாக் ப்ரீடர்ஸ் கோப் சொசைட்டி- செம்மண்தீவு, கத்தி முறிப்பு, அகத்தி முறிப்பு திட்டம்,அளவக்கை சிறுகுளம் திட்டம், அரிப்பு, அரிப்பு நீர் வழங்கல், ஆத்திமோட்டை, ஆத்திக்குழி,செம்மண்தீவு, இலந்தைமோட்டை, ஹனைஸ் நகர், கரடிக்குழி, காயக்குழி திட்டம், கொக்குப்படையான், கொண்டச்சி திட்டம், கொண்டச்சி நீர் வழங்கல் சபை, கொண்டச்சி சிங்கள கிராமம், கூழாங்குளம், கூழாங்குளம் திட்டம்(ஜீநாத் நகர்), மடுக்கரை, மணல் குளம், மணற்குளம், மறிச்சுக்கட்டி, மருதமடு, [illegible] மேதன் [illegible] பள்ளிக் குளம், முருங்கன், முசலி தேசிய பாடசாலையடி, பெரிய பொள்ளாச்சி பொற்கேனி, பாலைக்குழி, பாலைக் குழி திட்டம், பரப்பாங்கண்டல், பரிகாரிக்கண்டல், பெரிய பொள்ளாச்சி பொற்கேனி (பண்டார வெளி), பிச்சைக்குளம், பிச்சைவாணிபங்குளம் திட்டம், பொன்தீவு கண்டல் கள்ளிமோட்டை புளியங்குளம், பொன்னாச்சிகுளம், புதுக்காமம் கிராமம், புதுக்குடியிருப்பு (சிலாவத்துறை), புதுவெளி, சின்ன பொள்ளாச்சி பொற்கேனி திட்டம், சிலாவத்துறை, சூரிய கட்டைக்காடு, சின்ன பொள்ளாச்சி பொற்கேனி, தம்பட்ட முசலி, உயிர்த்தராசங்குளம், வெள்ளிமலை ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரசேதத்தில்** 18 ஆவது வி.ஐ.ஆர் இராணுவ முகாம்- தேவிபுரம், 68 ஆம் பிரிவு இராணுவ முகாம் இரணைப்பாலை, 682 படைப்பிரிவு இராணுவப் படை முகாம்- புதுக்குடியிருப்பு, 683 ஆம் பிரிவு இராணுவ முகாம் - தேராவில், ஹைட்றாமணி. 68 ஆவது பிரிவு - டயலொக் கோபுரம்- இரணைப் பாலை, தேவிபுரம், டயலொக் கோபுரம்-வள்ளிபுனம் புதுக்குடியிருப்பு, இடைக்காட்டுச்சந்தி, இனிய வாழ்வு இல்லம், இரணைப்பர்லை இருட்டுமடு, கைவேலி (மருத்துவமனை), கோம்பாவில், குறவில் உடையார்கட்டு, மூங்கிலாறு வடக்கு, கோம்பாவில், கே.டி.கே உணவகத்தடி, புதுக்குடியிருப்பு திறந்த பல்கலைக்கழகத்தடி, புதுக்குடியிருப்பு மருத்துவமனை, புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையம், புதுக்குடியிருப்பு பிரதேச சபை, புதுக்குடியிருப்பு மேற்கு (வானவில்), சுதந்திரபுரம், தேராவில், திம்பிலி, உடையார்கட்டு, வள்ளிபுனம், வெள்ளப் பள்ளம் உடையார்கட்டு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

**கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்)** 70

வாக்கெடுப்பின் உத்தியோகபூர்வ வாக்குப்பதிவு 83% ஆக இருந்தது. மேலும் வாக்களித்தவர்களில் பெரும்பாலானோர் (95.5%) ரஷ்யாவுடன் மீண்டும் இணைவதற்கான விருப்பத்தை ஆதரித்தனர். எவ்வாறாயினும், அதிக எண்ணிக்கையிலான டாடர்கள் (Crimean Tatars) மற்றும் உக்ரைனியர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை என்று பிபிசி செய்தியாளர் கூறியிருந்தார்.

சிவில் சமூகம் மற்றும் மனித உரிமைகளுக்கான கவுன்சில், கிரெம்ளின் ஆலோசனை அமைப்பானது, மார்ச் 16 சுதந்திர வாக்கெடுப்பின் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்ட முடிவுகளுக்கு கடுமையாக முரண்படும் கிரிமியா பற்றிய எச்சரிக்கை அறிக்கையை வெளியிட்டது. உண்மையான வாக்குப்பதிவு 30 முதல் 50 சதவீதம் வரை இருந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. வாக்களித்தவர்களில் பாதிக்கும் மேலானவர்கள் ரஷ்யாவின் இணைப்பைத் தேர்ந்தெடுத்தனர் என்று அவ் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

இவ் வாக்கெடுப்பு முடிவைத் தொடர்ந்து கிரிமிய பாராளுமன்றத்தில் (Supreme Council) இடம்பெற்ற வாக்கெடுப்பு ஒன்றின் படி, உக்ரைனிய சட்டம் அப்பகுதியில் செல்லாது என்றும் உக்ரைனிய அரசுக்குச் சொந்தமான கிரிமியாவில் உள்ள அனைத்தும் கிரிமியாவுக்கு உரியது என்றும் கூறப்பட்டது. மேலும் தங்களை கிரிமியா குடியரசின் மாநில கவுன்சில் என்று மறுபெயரிட வாக்களித்தனர்.



கிரிமியா மற்றும் செவாஸ்டோபோல் குடியரசை ரஷ்யா ஏற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தத்தில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கையெழுத்திடல் 18 மார்ச் 2014

அவர்கள் கிரிமியாவை ரஷ்யக் கூட்டமைப்பின் ஒரு பகுதியாக ஏற்றுக் கொள்ள ரஷ்யாவிடம் முறைப்படி வேண்டுகோள் விடுத்தனர். இம்முடிவுகளை உக்ரைனிய அரசு நிராகரித்திருந்தது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன இவ்வாக்கெடுப்பு சட்ட விரோதமானது என்று எச்சரித்திருந்தன.

**ரஷ்ய பாராளுமன்றத்தால் இணைப்பு ஒப்பந்தத்தை அங்கீகரித்த பிறகு, 18 மார்ச் 2014 அன்று கிரிமியாவை ரஷ்யாவுடன் முறையாக ஒருங்கிணைக்கும் சட்டத்தில் புடின் கையெழுத்திட்டார்.**

உக்ரைனும் பல நாடுகளும் இந்த இணைப்பைக் கண்டித்து, கொமன்வெல்த் சுதந்திர நாடுகள் நிறுவிய 1991 ஆம் ஆண்டு பெலவேஷா ஒப்பந்தங்கள் (Belavezha Accords), 1975 ஆம் ஆண்டு ஹெல்சின்கி ஒப்பந்தங்கள் (Helsinki Accords), 1994 ஆம் ஆண்டு ரஷ்ய -உக்ரைன் கையெழுத்திட்ட உக்ரைனின் பிராந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும் உத்தரவாதங்கள் என்ற புடாபெஸ்ட் குறிப்பாணைகளை (Budapest Memorandum) ரஷ்யக் கூட்டமைப்பு மற்றும் உக்ரைன் இடையே நட்பு, ஒத்துழைப்பு மற்றும் கூட்டாண்மை தொடர்பான 1997 ஒப்பந்தம் (Treaty on friendship) போன்றவற்றை மீறுவதாகக் கருதப்பட்டன. ஆனால், ரஷ்ய அரசாங்கம் இணைப்பு என்ற முத்திரையை (சொல்லை) எதிர்த்தது. புடினின் கருத்துப்படி மக்களின் சுயநிர்ணயக் கொள்கைக்கு இணங்குவதாகவும் வாக்கெடுப்பை ஆதரிப்பதாகவும் கூறினார்.

**கிரிமியாவின் சுயமாக அறிவிக்கப்பட்ட குடியரசு ரஷ்யக் கூட்டமைப்பிற்கு இணைவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதைத் தொடர்ந்து கிரிமியா குடியரசாகவும் செவஸ்டோபோல் ஒரு கூட்டாட்சி நகரமாகவும் ரஷ்யாவுடன் இணைந்து கொண்டன.**

அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் பல ரஷ்ய அதிகாரிகள் மற்றும் கிரிமியன் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது சொத்து முடக்கம் மற்றும் பயணத் தடைகளை விதித்தன. ஒப்பந்தம் கையெழுத்தான சில மணிநேரங்களுக்குள், சிம்ஃபெரோபோலுக்கு வெளியே உள்ள உக்ரைனிய இராணுவத் தளத்தை முகமூடி அணிந்த துப்பாக்கிதாரிகள் தாக்கியதில் ஒரு உக்ரைனிய சிப்பாய் கொல்லப்பட்டார்.

கிரிமியாவில் ரஷ்ய ஆதரவுப் படைகள் அங்குள்ள உக்ரைனியக் கப்பல்களையும் இராணுவத்தளங்களையும் கைப்பற்றின. உக்ரைனியப் படைகளில் பணியாற்றும் கிரிமியர்களைத் தமது பக்கத்துக்கு வருமாறு ரஷ்ய ஆதரவுப் படையினர் வேண்டுகோள் விடுத்தனர்.

(தொடரும்)

## எரிபொருள் இறக்குமதியில் சிக்கல் எரிசக்தி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

ரஷ்யாவிலிருந்து எரிபொருள் இறக்குமதி செய்வதில் இலங்கை பல சவால்களை எதிர்நோக்குவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

எரிபொருள் இறக்குமதி செய்வதில் உள்ள தடைகள் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிதி நிலை, எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கு பணம் செலுத்தத் தவறியமை நாட்டின் வங்கி அமைப்பில் இருந்து கடன் கடிதங்களை திறக்க முடியாமை அதற்கான காரணம் எனத் தெரிவித்ததுடன் ரஷ்யாவிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்ய 12 இற்கும் மேற்பட்ட நிறுவனங்களுக்கு ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் இந்த 3 மாதங்களுக்குள் எந்த நிறுவனமும் எங்களிடம் முன்பதிவு செய்யவில்லை எனவும் அமைச்சர் தெரிவித்தார். (நி)

## பிரித்தானியாவின் புதிய பிரதமருக்கு ஜனாதிபதி ரணில் வாழ்த்து



(கொழும்பு)

பிரித்தானியாவின் புதிய பிரதமர் லிஸ் ட்ரஸ்ஸுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது டுவிட்டர் பக்கத்தில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் இங்கிலாந்து இடையே இருதரப்பு மற்றும் கலாசார உறவுகள் தொடர்ந்து வளரும் என தான் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 300 | 250 | 250 |
| உருளைக்கிழங்கு | 220 | 240 | 240 | 280 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 250 | 300 |
| தக்காளி | 240 | 260 | 240 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 280 | 200 |
| கோவா | 400 | 400 | 450 | 400 |
| கரட் | 320 | 350 | 370 | 400 |
| பூசணி | 140 | 120 | 120 | 150 |
| புடோல் | 100 | 200 | 120 | 100 |
| வாழைக்காய் | 250 | 170 | 160 | 120 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 200-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 170 | 180 | 200 |
| பாகற்காய் | 450 | 400 | 430 | 400 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 240 | 240 |
| பயற்றங்காய் | 400 | 400 | 400 | 320 |
| லீக்ஸ் | 350 | 240 | 270 | 300 |
| பீற்றூட் | 160 | 150 | 160 | 250 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 | 600 |
| முருங்கைக்காய் | 600 | 850 | 500 | 800 |
| போஞ்சி | 500 | 400 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | — | 200 |
| கீரை - 1 பிடி | 140 | 120 | 150 | 100 |
| தேசிக்காய் | 300 | 400 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 40-80 | 60-90 |
| இராசவள்ளி | 220 | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 300 | 350 | 240 | 350 |
| முள்ளங்கி | 140 | 150 | 140 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 120 | 50 |
| வல்லாரை | 25 | 20 | 60 | 40 |
| ஈரப்பலா | 80 | 80 | 80 | 150 |

## கேகாலையில் தொடர் மழை
### அங்குருவெல்ல நகரம் வெள்ளத்தில் மூழ்கியது



(கேகாலை)

கடந்த சில தினங்களாக பெய்து வரும் தொடர்மழையால் நாட்டின் பல பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளதோடு நேற்று முன் தினம் இரவு முதல் பெய்த அடைமழையால் கேகாலை மாவட்டத்தில் அவிசாவளை கேகாலை பிரதான வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

அங்குருவெல்ல, ருவன்வெல்ல நகரங்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

அங்குருவெள்ள நகரம் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியதுடன் வியாபார நிலையங்கள் மற்றும் வீடுகளுக்குள் நீர் புகுந்து இழப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

அதேநேரம் களனி ஆறும் பெருக்கெடுத்து இருப்பதால் அதன் அண்டிய பிரதேச மக்களும் அவதானத்துடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று முதல்...

அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

அதன்படி, அரச மற்றும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறையின் கீழ் இயங்கும் பாடசாலைகளின் முதலாம் தவணை இன்றுடன் முடிவடைகிறது.

இதேவேளை, பாடசாலையின் இரண்டாம் தவணை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பாணின் விலை...

ஒன்றின் விலையை 350 ரூபாயாக அதிகரிக்க நேரிடும் என உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பாண் விற்பனை செய்வதன் ஊடாக தொடர்ந்தும் நட்டத்தை எதிர்நோக்குவதாக உணவக உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, எதிர்வரும் நான்கு நாட்களில் மீன் விலை 50 சதவீதத்தால் குறைவடையக் கூடும் என பேலியகொடை மெனிங் சந்தையின் மொத்த மீன் விற்பனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் சீரற்ற வானிலை காரணமாக சந்தையில் மீன் விலை அதிகரித்து காணப்படுகின்ற போதிலும் எதிர்வரும் காலங்களில் அதன் விலை குறைவடையக்கூடும் என அந்த சங்கத்தின் செயலாளர் ஜயந்த குரே தெரிவித்துள்ளார். (ம-7)

## பளையில்...

தாக அந்தச் சபை உரிமை கோரி வருகின் றது.

பெருந்தோட்ட சபைக்கு 1988 இல் 1,840 ஏக்கர் நிலம் வழங்கியதற்கான ஆவணமோ, சான்றுகளோ அந்தச் சபையிடமோ அல்லது ஆணைக்குழுவிடமோ இல்லாத சூழலிலும் சபை உரிமை கோரி வருவது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், அந்தச் சபையின் பெயரில் நிலத்தை மாற்றி, இராணுவத்தினர்மூலம் அங்கு பெரும்பண்ணை அமைப்பதற்கு 1,840 ஏக்கரையும் சபையின் ஊடாக இராணுவத்தினருக்கு வழங்க எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவுள்ள அமைச்சரவையில் பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் விவசாய அமைச்சு மற்றும் காணி அமைச்சு என்பன இணைந்து முன்னெடுப்பது தற்போது தெரியவந்துள்ளது. (ம-7)

## ராஜபக்ஷ...

வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ராஜபக்ஷ ஆட்சியின் செயற்பாடுகளே நாட்டில் பாரிய நெருக்கடி நிலைமைக்கு இட்டுச் சென்றுள்ளது.

ராஜபக்ஷர்கள் மாத்திரமல்ல, அவர்களைச் சுற்றியிருக்கும் அரசாங்கப் பிரதிநிதிகள், அவர்களது நண்பர்கள் மற்றும் கூட்டாளிகளுமே நிலவும் நெருக்கடிகளுக்குக் காரணம்.

2005ஆம் ஆண்டின் பின்னர் ஆட்சிக்கு வந்த முன்னாள் ஜனாதிபதி, ராஜபக்ஷவினர் இந்த நாட்டையும் அதன் சொத்துக்களையும் தமக்கு சொந்தம் என நினைத்தனர்.

அவர்கள் தாம் விரும்பும் விதத்தில் செயற்பட முடியும் என்றும், அவர்கள் செய்யும் ஒவ்வொரு மோசமான வேலையிலிருந்தும் தப்பித்துவிடலாம் என்றும் அவர்கள் நினைத்தார்கள் என்றும் சந்திரிகா குற்றம் சுமத்தினார். (ம-7)

## இராணுவம்...

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய சிறீதரன் எம்.பி,

இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணங்களில் எங்காவது ஒரு தமிழர் பொதுச் செயலாளராக அல்லது பிரதேச செயலாளராக இருக்கின்றாரா என பாராளுமன்றில் உறுப்பினர் சிறீதரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்தநிலையில் 80 வருட இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகவே மாகாண சபை கொண்டு வரப்பட்டது.

எனினும் வடக்கு மாகாணத்தில் தகுதியுள்ள அரச சேவையாளர்கள் இருக்கின்றபோதும், அங்கு சிங்களவர்கள் நியமிக்கப்படுகின்ற நிலைமையானது, ஆக்கிரமிப்பு செயற்பாடாகும் என்றும் சிறீதரன் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தில் தற்போதுள்ள பிரதம செயலாளரை விட அனுபவமிக்கவர்கள் வட மாகாணத்தில் உள்ள போதிலும் அங்கு ஒரு சிங்களவர் நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமிழர்களுக்காக இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் கொண்டு வரப்பட்ட மாகாண சபை திட்டத்தில் இன்று அதிகாரங்கள் யாரிடம் இருக்கின்றது என அவர் சபாநாயகரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய இடங்களில் கடலட்டைக்காக வழங்கப்பட்டுள்ள இடங்களில் சீனாவின் நிறுவனம் ஒன்றின் செயற்பாடு காரணமாக உள்ளூர் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சீன நிறுவனத்தினால், அங்குள்ள மக்கள் போசாக்கின்மை உள்ளவர்களாக மாற்றப்பட்டுள்ளனர்.

தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட போர் குற்றங்களுக்கு ஆதரவாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் பேசும் சீனா, இலங்கையின் அமைதியின்மையில் மறைகரமாக மோசமாக செயற்பட்டு வருகிறது என்றும் சிறீதரன் குற்றம் சுமத்தினார்.

கிளிநொச்சியில் கடல்றொழிலுக்கு சென்ற ராசரட்ணம் நிமால் என்பவர் கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ளார்.

இதற்கு எந்த காரணங்களும் இல்லை. எனினும் கடற்படையினர் மதுபோதையில் இருந்தால், தமிழர்கள் தாக்கப்படுகின்ற நிலை உருவாகியுள்ளமையே இதனை உணர்த்துகிறது என்று சிறீதரன் குறிப்பிட்டார்.

பச்சிலைப்பள்ளியில் இராணுவத்துக்கு 1840 ஏக்கர் காணியை கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் 14ஆயிரம் பேருக்கு காணியில்லை. கிளிநொச்சியில் 4000 பேருக்கு காணியில்லை.

எனினும் பலாலியில் படையினர் 3000 ஏக்கரில் தோட்டம் செய்கின்றனர் வட்டக்கச்சியில் இராணுவம் தோட்டம் செய்கிறது.

கொஞ்சம் என்றாலும்மூளையை பாவியுங்கள்! இராணுவம் தோட்டம் செய்வதன் மூலம் நாட்டின் போசாக்கின்மையை தீர்க்க முடியுமா? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்தநிலையில் 80 வருட இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காகவே மாகாண சபை கொண்டு வரப்பட்டது என்றார். (ம-7)

## வலம்...

"வலம்புரி" என்னும் பெயரில் புதிய அதிர்ஷ்ட லாபச் சீட்டு அறிமுகம் செய்யப்பட்டுள் ளது.

அதிர்ஷ்டத்தின் வெற்றி நாதம் "வலம்புரி" என்று பெயரிடப்பட்டுள்ளது.

தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையினால் குறித்த அதிர்ஷ்டலாபச் சீட்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. (ம-7)

## வாக்கெடுப்...

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ள மாற்றங்களை பின்பற்றுவதாக தெரிவித்துள்ளார். (ம-7)

## இட்டுச் சென்ற...

இலங்கையில் நடந்த கடந்த கால மற்றும் நிகழ்கால மனித உரிமை மீறல்கள், பொருளாதார குற்றங்கள் மற்றும் உள்ளூர் ஊழல் ஆகிய தண்டனை விலக்கு உட்பட பொருளாதார நெருக்கடிக்கு காரணமான அடிப்படைக் காரணிகளை அடையாளம் கண்டு நிவர்த்தி செய்வது இன்றியமையாதது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையை மீட்பதற்கும், நெருக்கடியின் அடிப்படைக் காரணங்களைத் தீர்ப்பதற்கும் ஆதரிக்குமாறு சர்வதேச சமூகத்தை உயர்ஸ்தானிகர் வலியுறுத்தியுள்ளார். (ம-7)


தன நிதானய
திகதி - 2022.09.06
சீட்டிழுப்பு இலக்கம் - 900
N 05 14 61 65

மஹஜன சம்பத
திகதி 2022/09/06
சீட்டிழுப்பு இலக்கம் 4870
R 1 1 8 6 4 5

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.09.06
சீட்டிழுப்பு இலக்கம் 179
விருச்சிகம் 28 31 50 57

மெகா பவர்
திகதி 06/09/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1218
W 15 05 09 35 37

கொவிசெத
திகதி 2022.09.06
சீட்டிழுப்பு இலக்கம் 3112
M 04 17 41 63

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 06/09/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1325
கடகம் 6 7 7 2 3 8

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1845
நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.09.06
தினம் செவ்வாய்க்கிழமை
M 18 25 45 65
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,465,660/-

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.09.06
சீட்டிழுப்பு இல : 4006
வர்ணம் : இள நீலம்
ரூ. 3,072,820/-
10 15 17 41 C

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 219
சீட்டிழுப்பு திகதி 2022.09.06
செவ்வாய்க்கிழமை
10 22 37
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,843,400/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,038,737.60
திகதி 2022-09-06
வெற்றி வாரம் 3557
வர்ணம் சிவப்பு
29 31 54 55 ரிஷபம்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 7,187,200/-

25 லக்ஷ்பதி
F 32 40 46 68 70
சீட்டிழுப்பு வாரம் 1021
2022.09.06
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 258,821,797/-
தொலை பேசி 011-2 333 546-47

அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல : 1671
வர்ணம் : இள நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2022.09.06
ரூ. 4,231,640/-
23 29 55 74 F


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (12697)

076 825 7716 (ஆகாஸ்)

# எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்க முடியாது

## எரிசக்தி அமைச்சர் காஞ்சன



(கொழும்பு) நாட்டில் தற்போதைய எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்க முடியாது என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கைக்கான எரிபொருள் இறக்குமதியை பாதிக்கும் அந்நியச் செலாவணி நெருக்கடி காரணமாகவே இந்த ஒதுக்கீட்டை அதிகரிக்க முடியாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அந்நிய செலாவணி நெருக்கடி ஓரளவு தணிக்கப்பட்டவுடன் எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையின் நாளாந்த எரிபொருள் நுகர்வு 3,000 லீட்டர்கள் என தரவு பகுப்பாய்வு வெளிப்படுத்தியுள்ளது. (ம-7)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (12701)

## இலவச விசா வாய்ப்பு

அமெரிக்க லொத்தர் விசா

அமெரிக்கா செல்ல பாஸ்போட் எடுத்துவிட்டீர்களா? (C-4877)

!!!அலட்சியம் வேண்டாம்!!! October 05 பதிவு ஆரம்பம்

18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் விண்ணப்பிக்கலாம்
குடும்பத்தினருக்கு இரண்டு வாய்ப்புக்கள்|PASSPORT அவசியம்.

எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்காவில் நூற்றுக்கணக்கானோர் வாழ்கின்றனர்

V2 TRAVELS 0768226244 0768226240

புதிய பிரிவுகள் ஆரம்பம்
10.09.2022

வங்கியியல் கற்கைநெறிகள்
**Banking Courses**
**IABF & DABF**
(Tamil & English Medium)
Qualification:- G.C.E O/L
6 Passes with 5
Credits including Maths.

கணக்காளர் கற்கைநெறிகள்
**Chartered Accounting Courses**
Business level - 1, II
(Tamil & English Medium)
Qualification:- G.C.E A/L 3 Passes.

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
**aat (Sri Lanka)**
**AA1, AA2, AA3**
Qualification:- G.C.E O/L 6 Passes
Medium - Tamil & English

G.C.E A/L பெறுபேற்றினை
எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்

**Certificate Course in English**
20 Batches have successfully Completed the Course

Further Details: **Jaffna College**
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382, 021 222 9149
077 440 5917 (C-4876)

## வட இந்திய காசி யாத்திரை

ஆரம்பம் 05.10.2022 நாட்கள் 12

டெல்லி, மதுரா, தாஜ்மஹால், அலகாபாத், திருவேணி சங்கமம், கயா, புத்தகயா, புத்தாலயங்கள், காசி விஸ்வநாதர், இராமேஸ்வரம், மதுரை, பிரம்மபுரிஸ்வரர் சிவன், சென்னையில் ஒருநாள் சொப்பிங்.

அனைத்துச் செலவுகளும் உட்பட விபரங்கட்கு:
கலாநிதி: T.ஸ்ரீரெங்கநாதன்
077 768 0102 (12699)

## காணி விற்பனைக்கு

A9 வீதி, நாவற்குழி சந்தியில் Station முன்பாக உள்ள 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (12692)

076 387 4093

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

## வேலை வாய்ப்பு

பருத்தித்துறையில் இயங்கிவரும் பிரபல திருமண மண்டபத்திற்கு திருமண மண்டப மேற்பார்வையாளர், உதவிக் கணக்காளர், உணவு பரிமாறுவோர் தேவை. (C-4873)

தொடர்புகளுக்கு
077 704 6623
077 315 1654

## வேலை வாய்ப்பு

சுண்டுக்குளி ஆரம்ப பாடசாலையில்
தரம் 2இல் கல்வி கற்கும் சிறுமிக்கு உதவி ஆசிரியர் தேவை.
வேலை நேரம் : காலை 7.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை
கச்சேரி, நல்லூர் பகுதிகளை அண்டி வசிப்போர் விரும்பத்தக்கது.
வயதெல்லை : 18 - 25 வரை
சம்பள விபரம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். 077 104 1923 (C-4864)

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER
- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது) (C-4822)

V2 TRAVELS
AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்
49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
- ONLINE APPLICATIONS
- VISA APPOINTMENTS
- PASSPORT APPLICATION
- POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4822)

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்க இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS
0777-068-777

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 33 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- நான்கு பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி முகப்புடன் (காபற் வீதி)
- 784 இலக்க போக்குவரத்து பேருந்துகள் அதிகம் செல்லும் வீதி
- பொன்னாலை ரவுண்டப்போட் சந்தியில் இருந்து 1 km தூரத்தில்
- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி (Jaffna College) இருந்து 1 km தூரத்தில்
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை 1½ இலட்சம் மட்டும்
- 20 அடிப் பாதையுடன் (12683)

தொடர்புகளுக்கு:-
076 755 8606, 077 911 6983

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 141 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1½ Km தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1½ Km தூரத்தில்
- புத்தூர் சந்தியில் இருந்து (பருத்தித்துறை வீதி) மட்டுவில் செல்லும் பிரதான வீதியில் (காபற் வீதி) இருந்து இரண்டாவது காணி
- 775 இலக்க போக்குவரத்து பேருந்துகள் செல்லும் காபற் வீதி
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்வதற்கும் வீடுகள் அமைப்பதற்கும் உகந்த காணி
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை 1½ இலட்சம் மட்டும்
- 20 அடிப் பாதையுடன் (12683)

077 658 5999, 076 436 5814
077 874 8135

# சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம்

## Centre for Child Development - CFCD

## பதவி வெற்றிடங்கள்

யாழ். மாவட்டத்தில் இயங்கிவரும் அரச சார்பற்ற நிறுவனமான சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தில் யாழ், கிளி, முல்லை மாவட்டங்களுக்கான ஒப்பந்த அடிப்படையில் கீழ்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன. பொருத்தமான தகைமையுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தகுதியுள்ளோர் தங்களின் சுயவிபரக்கோவையினை 14.09.2022 திகதிக்கு முன்னதாக கீழே தரப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

1. **திட்டமுகாமையாளர் (Project Manager)**
2. **அறிக்கைப்படுத்தல் உத்தியோகத்தர் (Reporting Officer)**

இல.1, இல.2 ஆகிய பதவிகளுக்கு அரச சார்பற்ற நிறுவனத்தில் பணிபுரிந்த 3 வருட கால அனுபவம், பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம், பூரண ஆங்கில அறிவு, அறிக்கையிடல் திறன், பூரண கணனி அறிவு போன்ற தகைமைகள் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

3. **களப் பணியாளர் (Field Officer)**

கணனி அறிவு, அரச சார்பற்ற நிறுவனத்தில் பணிபுரிந்த 2 வருட கால அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (12693)

Email To : cfcdjob@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்சோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.09.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.